# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சி'காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 2924 / 2013 / எம்சி. 8 நாள் : 18 .04.2013**

**அய்யா /அம்மா,**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் **25.04.2013 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**உண்மை நகல்**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஏப்ரல் 2013

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | இ). **தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் (நெ) திட்டங்கள் கோட்டம் - இராமசந்திராநாயுடு தெரு (மாநகராட்சி சாலை) கிமீ. 0/4ல் இரயில்வே கி.மீ. 2/9 – 11ல் கோயம்புத்தூர் - இருகூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் கடவு எண் 3க்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டுதல் -மாமன்ற தீர்மானம் எண் 65 நாள் 01.06.2012 ஐ ரத்து செய்தல் - மேம்பாலத்திற்கு பதிலாக அளவான பயன்பாடு சுர்'கபாதை அமைத்தல் (LUS) – மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| **2** | பொறியியல் பிரிவு - குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 62 – என்.கே. பாளையம் ஐயர் லேஅவுட்டில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 53 – ஆவராம்பாளையம் சாலையில் சின்னசாமி சாலை முதல் சங்கனூர் பள்ளம் வரை மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **5** | பணியமைப்பு - **27.05.2013** முதல் **31.05.2013** முடிய சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ள Temasek Foundation Leaders in Urban Goverance programme (LUGP) – கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்புதல் - மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **6** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் ஈரப்பதம் மிகுந்த மக்கும் தன்மையுடைய திடக்கழிவுகளிலிருந்து வெளியேறும் பையோ கேஸினைக் (Bio-Gas) கொண்டு மின்சாரம் தயாரித்தல் - மாநகராட்சி நிதி மூலமோ அல்து தனியார் பங்களிப்புடனோ நிறுவி செயல்படுத்துதல் - பரிட்சார்ந்த முறையில் கவுண்டம்பாளையம் பகுதியில் புதிய மார்க்கெட் வளாகம் அமையும் பகுதியில் அமைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியாக மற்ற இடங்களிலும் நிறுவுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **7** | Jnnurm -ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல் -முதல் அழைப்பில் மதிப்பீட்டுத் தொகைக்கும் 3.29% அதிகமாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியுனை ஏற்பது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **8** | Jnnurm - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் பணியாளர்கள் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் - முதல் அழைப்பில் மதிப்பீட்டுத் தொகைக்கும் 8.81% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **9** | Jnnurm - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் பொறியாளர்கள் குடியிருப்பு (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் - முதல் அழைப்பில் மதிப்பீட்டுத் தொகைக்கும் 4.38% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **10** | Jnnurm - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் தலைமை நீரேற்று வளாகத்தைச் சுற்றி சுற்றுசுவர் கட்டும் பணியினை மேற்கொள்ளுதல் - முதல் அழைப்பில் மதிப்பீட்டுத் தொகைக்கும் 1.86% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **11** | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2013-16 ம் ஆண்டு – வருடாந்திர குத்தகை இனங்கள் 3 – உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரர்களுக்கு உரிமம் ஒப்படை செய்தல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு ஒப்படைப்பு செய்யப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **12** | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2013-16 ம் ஆண்டு – செட்டிபாளையம் மாடுவதை சாலை – அரசாங்க மதிப்பை காட்டிலும் குறைவாக ஏலம் பெறப்பட்டது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு ஒப்படை செய்யப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **13** | கிழக்கு மண்டலம்- வருவாய் பிரிவு -குத்தகை இனம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - திரு. குமரேசன் என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்யப்பட்டது – குத்தகைத் தொகை செலுத்தப்படாதது – ஏலஇனத்திற்கு செலுத்திய தொகையை பறிமுதல் செய்தல் மற்றும் ஏலதாரரை கருப்புப் பட்டியலில் சேர்த்தல் - மேலும் கடந்த ஆண்டு குத்தகை இனத்தை மேற்கொண்ட ஏலதாரருக்கு 01.04.13 முதல் 30.06.2013 வரை மூன்று மாத காலத்திற்கு உரிமம் ஒப்படைத்தல் - வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளரின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **14** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2013-16 ம் ஆண்டு – சிங்காநல்லூர் வார மற்றும் தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - அரசாங்க மதிப்பை காட்டிலும் குறைவாக ஏலம் பெறப்பட்டது – ஏலதாரருக்கு உரிமம் ஒப்படை செய்தல் - ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **15** | Jnnurm – பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்ட பிரதான குழாய் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **16** | பொது சுகாதாரப் பிரிவு - கோவை வ.உ.சி. உயிரியல் பூங்காவிற்கு புதிய இடம் தேர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - கோவை அரசு மருத்துவமனைக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - மதிப்பீடு ரூ.72.60 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு புதிய ஆய்வு வாகனம் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | பணியமைப்பு - டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் 01.04.2013 முதல் 31.03.2014 வரை ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - காந்திபுரம் நகர மற்றும் மத்திய பேருந்து நிலையங்கள் வடிவமைத்தல் - வடவள்ளி மற்றும் குறிச்சி பகுதி பேருந்து நிலையங்கள் வடிவமைத்தல் - மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகம் வடிவமைத்தல் மற்றும் மத்திய மண்டல அலுவலகத்தில் மாமன்றக் கூடம் வடிவமைத்தல் - மேட்டுப்பாளையம் சாலை எம்.ஜி.ஆர். மற்றும் அண்ணா மார்க்கெட் சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்கள் வடிவமைத்தல் - விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **21** | மத்திய மண்டலம் - குத்தகை இனம் - டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாக கடை எண் 18 – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - அரசாங்க மதிப்பை காட்டிலும் குறைவாக ஏலம் பெறப்பட்டது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **22** | மத்திய மண்டலம் - குத்தகை இனங்கள் 3 – 01.04.2013 முதல் 31.03.2016-ஆம் ஆண்டு வரை ஒப்படை செய்தல் – அரசாங்க மதிப்பை காட்டிலும் குறைவாக ஏலம் பெறப்பட்டது மற்றும் உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கை பெறப்பட்டது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **23** | பணியமைப்பு **– 08.05.2013** மற்றும் **09.05.2013** ஆகிய இரண்டு நாட்கள் காட்மாண்ட், நேபாள நாட்டில் நடைபெற உள்ள Testrun for Cities and Climate Change Training and new Governance Training for Partners – கூட்டத்தில் ஆணையர் அவர்கள் பங்குபெற – அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **24** | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 27 – சின்னவேடம்பட்டி பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள 20 தொகுப்பு வீடுகள் -பராமரிப்பு செய்தல் - அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -- தொடர்பாக |
| **25** | நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம் – வடவள்ளி கிராமம் க.ச.72/2 எ(1)ல் உள்ள 47 சென்ட் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **26** | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - ஒண்டிப்புதூர் பகுதியில் அமைக்கப்படவுள்ள நவீன சுத்திகரிப்பு நிலையம் - மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு முகமையாக தொழில்நுட்ப குழுவை நியமனம் செய்தல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | பொது சுகாதாரப் பிரிவு - அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் ஈஷா யோகா மையம் மூலம் யோகா பயிற்சி அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **28** | பொது சுகாதாரப் பிரிவு - 6 நகர்நல மையங்களில் மகப்பேறு தொடர்பாக மருத்துவ சேவைகளை மேம்படுத்துதல் - மதிப்பீடு 50 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **29** | பொது சுகாதாரப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்தல் – மாமன்றத்தின் அனுமதி பெறுவது – தொடர்பாக |
| **30** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்குட்பட்ட ஐந்து இடங்களில் அம்மா உணவகம் அமைக்க கட்டிடங்களை மாற்றியமைத்து கட்டுதல் - மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **31** | Jnnurm - இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தி.ள். எல்காட் நிறுவனம் வரை குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பதித்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **32** | வருவாய் பிரிவு - சொத்துவரி/காலியிடவரி கேட்பு அட்டை - தொலைந்துபோன சொத்துவரி/ காலியிடவரி கேட்பு அட்டைக்கான கட்டணம் ரூ.50/- ஆக நிர்ணயம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **33** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - 2013-2016-ம் ஆண்டுக்கான 5 குத்தகை இனங்கள் - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **34** | மேற்கு மண்டலம்- வருவாய் பிரிவு - வார்டு எண் 5 - ஓணாம்பாளையம் ரோடு வணிகவளாக கடை- பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.03.2013-ல் நடைபெற்றது – ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **35** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண்.24 தடாகம் ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2013-14 (மூன்று மாதங்களுக்கு) உரிமம் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **36** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் - மேட்டுப்பாயைம் ரோடு எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மார்க்கெட்டுக்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியை ஒப்படைப்பு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - |
| **37** | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2 குத்தகை இனங்கள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியை ஒப்படைப்பு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - |
| **38** | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 55க்கு உட்பட்ட செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **39** | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 55க்கு உட்பட்ட காய்கடை மைதானம், தண்டபாணி வீதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **40** | பொது சுகாதாரப் பிரிவு **–** கோயம்புத்தூர் மாநகரத்தில் **5** “அம்மா உணவகங்கள்” திறக்கப்பட வேண்டும் என்ற செயலாக்கம் குறித்து முதற்கட்டமாக மண்டலத்திற்கு ஒன்று வீதம் **5** உணவகங்களை திறக்க பிரேரணை அனுப்பியது **–** மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் **–** தொடர்பாக**.** |
| **41** | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது **–** தொடர்பாக**.** |
| **42** | பொறியியல் பிரிவு - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட சாலைகளில் மூன்றாம் கட்டமாக சாலைகளை புதுப்பித்தல் - திட்டத்திற்கான மானியம் மற்றும் கடன் தொகையை தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் இருந்து பெற்று மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **43** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குதல் - கடன் தீர்வை சான்றிதழ் மதிப்பு குறைப்பது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.

**(குறள் -578)**

<u>விளக்கம்</u>

கருமமே கண்ணாகச் செயலாற்றிக் கருணை பொழிய வல்லவர்களுக்கு உலகியல் வாழ்வில் நலம்பெற முன்னுரிமை உண்டு.

**திருவள்ளுவர்.**

---

ஆ) **<u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம் எண் 1

சென்னை மாநகராட்சிக்கு அடுத்தபடியாக கோவை மாநகராட்சியில் முதன்முறையாக அம்மா உணவகம் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வா் டாக்டா் புரட்சித்தலைவி அம்மா அவா்கள் உத்திரவு வழங்கியுள்ளாா்கள்.

கோவை மாநகராட்சியில் அம்மா உணவகம் செயல்படுத்துவதற்கு உத்திரவு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வா் டாக்டா் புரட்சித்தலைவி அம்மா அவா்களுக்கு கோயம்புத்துாா் மாநகராட்சி மாமன்றம் சாா்பாக நன்றிகளை சமா்பிக்கிறோம் என்ற சிறப்புத் தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் அனுமதியுடன் 23 வது வாா்டு மாமன்ற உறுப்பினா் திருமதி எஸ். மணிமேகலை அவா்களால் முன்மொழியப்பட்டு சுகாதாரக்குழுத் தலைவா் திருமதி. சு. தாமரைச்செல்வி அவா்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 25.04.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் எண் 2

தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்காக அல்லும்பகலும் அயராது பாடுபட்டு இன்று தமிழகத்தில் வேளாண்மைத்துறை, கல்வித்துறை இந்தியாவிலேயே முதன்மை பெற்றிருக்கின்ற அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு தமிழகத்தில் மக்களுக்காக நித்தமும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மனித நேயமிக்க மாண்புமிகு தமிழக முதல்வா் டாக்டா் புரட்சித்தலைவி அம்மா அவா்களின் அரசு வரியில்லாத நிதிநிலை அறிக்கை அறிவித்ததற்காக கோயம்புத்துாா் மாநகராட்சி மாமன்றம் சாா்பாக நன்றியை தெரிவிக்கிறோம் என்ற சிறப்புத் தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் அனுமதியுடன் சுகாதாரக்குழுத் தலைவா் சு. தாமரைச்செல்வி அவா்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவா் திரு. ஆா். பிரபாகரன் அவா்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 25.04.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் எண் 3

கோவையிலிருந்து பாலக்காடு வழியாக ரயில்கள் செல்லும் வழியில் பொள்ளாச்சி பாதையில் தேசிய நெடுஞ்சாலையிலும் மதுக்கரை ரோட்டில் மாநில நெடுஞ்சாலையிலும் இரு ரயில்வே கேட்கள் அமைந்துள்ளது.

பொள்ளாச்சி சாலை மற்ற மாவட்டங்களை இணைக்கின்ற முக்கிய சாலையாக இருப்பதினாலும், மதுக்கரை சாலை அருகிலுள்ள கேரளா மாநிலத்தை இணைக்கின்ற முக்கிய சாலையாக இருப்பதினாலும் ரயில்வே கேட்கள் அடிக்கடி மூடப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்துக் கொண்டிருந்தனா்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவா்களின் கருணையினால் இன்று மதுக்கரை சாலையில் உள்ள ரயில்வே கேட் இருவழி பாதையாக மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனா். அதேபோல பொள்ளாச்சி சாலை ரயில்வே கேட் இருவழிச்சாலையாக கட்டப்பட்டு வருகிறது.

இவ்விரண்டு சாலைகளிலும் அதிகப்படியான போக்குவரத்து நடைபெறுவதால் பாலத்தினை பல்வேறு வாகனங்கள் சீக்கிரம் கடந்து செல்ல நான்குவழிச் சாலையாக மாற்ற மற்றொரு பாலத்தினை சோ்த்துக்கட்ட அரசிடம் கோரிக்கை வைக்கவேண்டும் என்ற சிறப்புத் தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் அனுமதியுடன் தெற்கு மண்டலத் தலைவா் திரு. எம். பெருமாள்சாமி அவா்களால் முன்மொழியப்பட்டு பணிகள் குழுத் தலைவா் திரு.கே. அா்ச்சுனன் அவா்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 25.04.2013

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் சாலை சந்திப்புகளில் விளம்பரங்கள் அதிகளவில் வைக்கப்பட்டும், சுவர்களில் உரிய அனுமதி பெறாமல் விளம்பரங்கள் எழுதப்பட்டும் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டும் நகரமெங்கும் உள்ளது. சுவர்களில் எழுதுதல், சுவரொட்டிகள், பேனர்கள் வைத்தல் போன்றவைகள் அனுமதி பெற்றுத்தான் வைக்கவேண்டும். கோவை மாநகராட்சி ஒரு சென்சிட்டிவான நகரம். எனவே அனுமதியில்லாமல் விளம்பரங்கள் செய்யப்பட்டால் அவர்கள்மீது காவல்துறையின் மூலம் மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 25.04.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

**பொருள் :-** கோயம்புத்தூர் (நெ) திட்டங்கள் கோட்டம் - இராமசந்திராநாயுடு தெரு (மாநகராட்சி சாலை) கிமீ. 0/4 ல் இரயில்வே கி.மீ. 2/9 – 11ல் கோயம்புத்தூர் - இருகூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் கடவு எண் 3க்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டுதல் இரயில்வே பணி திட்டம் 2011-12 - மேம்பாலத்திற்கு பதிலாக அளவான பயன்பாடு சுரங்கபாதை அமைத்தல் (LUS) – தொடர்பாக.

**பார்வை :-**
1. அரசாணை எண். (டி) 200/ நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.க்யூ.2) துறை நாள் 07.12.2011
2. இராமசந்திரா வீதி பொது மக்கள் விண்ணப்பம் நாள் 29.06.2012.
3. இராமசந்திரா வீதி இரயில்வே கேட்டிற்கு வடபுறமுள்ள சூர்யா நகர், கண்ணன் நகர், ஸ்ரீ மீனாட்சி நகர் பகுதி மக்கள் விண்ணப்பம் நாள் 01.11.2012
4. தலைமைப் பொறியாளர்(நெ) திட்டங்கள், சென்னை ஆய்வுக் குறிப்பு எண் 700/W2/2012 நாள் 21.02.2012
5. கோட்டப் பொறியாளர் (நெ) திட்டங்கள் கோட்டம், அவர்களின் கடிதம் எண் 1263/ 2005/ இவஅ நாள் 13.02.2013

--------------------

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இரயில்வே திட்டப் பணிகள் 2010-2011ன் கீழ் மேற்படி இரயில்வே கடவு எண் 3க்கு பதிலாக ( இராமசந்திரா நாயுடு தெரு மாநகராட்சி சாலை கிமீ. 0/4ல்) சாலை மேம்பாலம் கட்டும் பணிக்காக ரூ. 26.70 கோடிக்கு நிர்வாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி கடவு எண் 3ல் அமைந்துள்ள சாலை குடியிருப்பு பகுதிகள் நெருக்கமாக அமைந்துள்ள கோவை மாநகராட்சி சாலை ஆகும். மேற்கண்ட சாலையில் கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள் ஏதும் செல்வதில்லை.

மேலும் இப்பாலம் 8.50மீ மொத்த அகலமும், 7.50 மீ ஓடுதளத்தின் அகலமும் (Carriage way) 662 மீட்டர் நீளமும், பாலத்தின் இருபுறங்களிலும் தலா 3.75 மீ அகலத்திற்கு சேவைச் சாலையும் 1.50 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையுடன் கூடிய கழிவு நீர் கால்வாயும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, பாலத்திற்கு பாலத்தின் நேர் கோட்டு மையத்திலிருந்து இருபுறமும் 10 மீட்டர் அகலம் தேவைப்படுகிறது. ஆனால் இராமசந்திரா நாயுடு தார் சாலையில் தற்பொழுது உள்ள மொத்த அகலம் 7 மீட்டர் ஆகும். எனவே பாலத்திற்கு சாலையின் மையத்திலிருந்து இருபுறங்களிலும் தலா 10 மீட்டர் எடுக்கும் பொழுது சுமார் 100 குடும்பங்களின் குடியிருப்பு வீடுகளை இடித்து நிலமெடுப்பு செய்ய வேண்டியுள்ளது.

இதன்பொருட்டு பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்படும் 100 குடும்பங்கள் இரயில்வே கேட்டை நிரந்தரமாக மூடிவிட்டு கேட்டிற்கு கீழே அளவான சுரங்க நடைபாதை அமைக்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள் என பார்வை 5ல் காணும் கோட்டப் பொறியாளர் (நெ) திட்டங்கள் கோட்டம், அவர்களின் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

எனவே அப்பகுதி மக்களின் பாதிப்பினை கருத்தில் கொண்டு கடவு எண். 3ல் சாலை மேம்பாலம்(ROB) அமைப்பதற்கு ஏற்கப்பட்ட மாமன்றத் தீர்மானம் எண் 65 நாள் 01.06.2012 ஐ ரத்து செய்துவிட்டு, அரசு விதிகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு நெடுஞ்சாலைத் துறைக்கு பணி மேற்கொள்ள சாலைகளை தற்காலிகமாக ஒப்படைப்பு செய்யவும், பணி முடிந்த பின்னர் உடன் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கோட்டப் பொறியாளர் (நெ) திட்டங்கள் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் வேண்டுகோள்படி அளவான பயன்பாட்டிற்கான சுரங்க நடைபாதை நெடுஞ்சாலைத்துறை மற்றும் ரயில்வே துறை நிதியின் மூலமாக அமைக்க (Pedestrial Subway) கோட்டப் பொறியாளர் கேட்டுக்கொண்டதுபோல் மாமன்றம் முடிவு செய்ய அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மாமன்றம் முடிவிற்கு, ந.க.எண். 883/2013/எம்.டி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 25.04.2013**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் உள்ள குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதி, மேடான பகுதி, பிரதான குழாய் கசிவு ஏற்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்பொழுது குடிநீர் தடை ஏற்படும் காலங்கள் மற்றும் அன்றாட குடிநீர் சம்பந்தமான புகார் பிரச்சனைக்கேற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் பாரதி பூங்கா மேல்நிலைத் தொட்டி (HLR), கணபதி (MSR) மேல்நிலைத் தொட்டி, வரதராஜபுரம் மேல்நிலைத் தொட்டி மற்றும் புலியகுளம் மேல்நிலைத்தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரியின் ஒப்பந்தத் தொகை முடிவடையவுள்ளதால் புதியதாக உத்தேச செலவினம் ரூ 75.00 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மான எண். 321 நாள்-31.01.2013 –ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதைத் தொடர்ந்து இப்பணிக்கு கடந்த 25.02.2013 அன்று முதல் அழைப்பாக இரு உறைகள் முறையில் மின்னனு (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு கே.எஸ். ராமலிங்கம், திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகாண் கூறுகள் (Qualification criteria) திறனாய்வு செய்ததில் திரு கே.எஸ். ராமலிங்கம், திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர்.

எனவே, மேற்படி தகுதிகாண் கூறுகளில் தேர்வு பெற்றுள்ள திரு கே.எஸ்.ராமலிங்கம், திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில்குமார் ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்று விலைப்புள்ளி உறையை திறக்க ஆணையர் அவர்கள் 26.02.2013ல் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 27.02.2013ல் விலைப்புள்ளி உறைகள் திறக்கப்பட்டதில் திரு கே.எஸ். ராமலிங்கம், திரு ஜி.சசிக்குமார் மற்றும் திரு. ஜி.செந்தில் குமார் ஆகியோர்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு |
| 1 | திரு ஜி.சசிக்குமார் | 1 | 935 | 1 | 555 |
| 2 | திரு கே.எஸ். ராமலிங்கம் | 1 | 944 | 1 | 561 |
| 3 | திரு. ஜி.செந்தில் குமார் | 1 | 953 | 1 | 570 |

மேற்படி விலைப்புள்ளிகளில் முதலாவதாக குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஜி.சசிக்குமார் அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க கேட்டதில், அவர் தமது 04.03.2013ம் தேதிய கடிதத்தில் டீசல் விலையேற்றம் மற்றும் லாரி உதிரி பாகங்கள் விலையேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் |
| 1 | திரு ஜி.சசிக்குமார் | 935 | 555 | 920 | 500 |

தற்சமயம் உள்ள ஒப்பந்தப்புள்ளி முடிவடைய உள்ளதாலும், கோடை காலம் ஆரம்பிக்க உள்ளதாலும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதை சமாளிக்கவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு ஜி.சசிக்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (விலைக்குறைப்பிற்குபின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திற்கு) ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 14291/2012/ எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண் 62க்குட்பட்ட என்.கே. பாளையத்தில் உள்ள ஐயர் லே அவுட்டில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் –ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல்– தொடர்பாக.

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.02.2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5791/2012 /எம் டி5 | வார்டு எண் 62க்கு உட்பட்ட ஐயர் லேஅவுட்டில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் | 33.00 | 15-02-2013 நான்காவது அழைப்பு | திரு. பி.சின்னப்பன் கோயம்புத்தூர் 1.57% அதிகம் | திரு. பி.சின்னப்பன் கோயம்புத்தூர் 1.57% அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

வரிசை எண்.1ல் உள்ள பணி மாமன்றத்தின் அனுமதி வரம்பிற்குள் வருவதாலும், மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5791/2012/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13158/12 /எம் டி 4 | வார்டு எண் 53-க்குட்பட்ட ஆவராம்பாளையம் சாலையில் சின்னசாமி சாலை முதல் சங்கனூர் பள்ளம் வரை மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 64.00 | 06.03.2013 முதலாவது அழைப்பு | 1. திருமதி எம். சரோஜினி, கோயம்புத்தூர் 0.09% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) 2. தி /ள். ஜெ.பி.எஸ். அசோசியேட்ஸ், கோயம்புத்தூர், 5.43 அதிகம் | திருமதி எம். சரோஜினி, கோயம்புத்தூர் 0.09% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

இப்பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமான கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 13158/2012/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – 27.05.2013 முதல் 31.05.2013 முடிய சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ள Temasek Foundation Leaders in Urban Goverance programme (LUGP) - கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் பங்குபெற – அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **பார்வை :** | நிர்வாக இயக்குநர், Centre for Liveable Cities அவர்களின் கடிதம் நாள்.21.03.2013. |

பார்வையில் காணும் கடிதத்தில் 27.05.2013 முதல் 31.05.2013 முடிய 5 நாட்கள் சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ள Temasek Foundation Leaders in Urban Goverance programme (LUGP)ல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கடித்தில், இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்கள் சிங்கப்பூர் நாட்டின் வளர்ச்சியினைப் பற்றி அறிந்து கொள்ளவும், இந்நாட்டின் முன்னாள் மற்றும் தற்போதைய தலைவர்களுடன் கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இதன்மூலம் பங்கேற்பாளர்கள் தங்களது நகர மேம்பாட்டிற்கானத் திட்டங்களைச் சிறந்த முறையில் திட்டமிட இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ளவும், இதற்காகும் மொத்த செலவினையும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கவும் அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 109/2011/எம்சி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் கூடுதலாக ஒரு அதிகாரி கலந்துகொள்ள அனுமதி வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.47666/P3/2012 நாள் 01-03-2013-ல் மாநகராட்சி பகுதிகளிலுள்ள ஹோட்டல்கள், உணவகங்கள்/ சிற்றுண்டிகள், திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள், மருத்துவமனைகள், ஆடு/மாடு அறுவை மனைகள், காய்கறி சந்தைகள், மீன்/ஆட்டிறைச்சி அங்காடிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் உருவாகும் ஈரப்பதம் மிகுந்த மக்கும் தன்மையுடைய திடக்கழிவுகளிலிருந்து வெளியேறும் பையோ கேஸினைக் (Bio-Gas) கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கான (Waste-to-Energy) சாத்தியக்கூறுகள் உள்ளதெனவும், வேலூர் மாவட்டம் ஆர்காடு நகராட்சியில் காய்கறி வியாபாரிகள் சங்கத்தினர் நகராட்சியுடன் இணைந்து அங்குள்ள ஓர் காய்கறி சந்தையில் 3 மெட்ரிக் டன் கொள்ளளவிலான ஈரப்பதம் மிகுந்த காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்பினை பையோ-மீத்தனேஷன் (Bio-Methanation Process) முறையில் ஏற்படுத்தியுள்ளதாகவும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து நாளொன்றிற்கு 280 யூனிட்கள் மின் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அக்கடிதத்தில் அம்முறையினை பின்பற்றி மற்ற உள்ளாட்சி அமைப்புகளும் தத்தம் பகுதிகளில் தேவைக்கேற்ப 3 மெட்ரிக் டன் /5 மெட்ரிக் டன் /10 மெட்ரிக் டன் கொள்ளளவிலான ஈரப்பதம் மிகுந்த காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் அமைப்புகளை மாநகராட்சி மன்ற ஒப்புதலினை பெற்று ஏற்படுத்தி அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அமைப்பிலிருந்து உற்பத்திசெய்யப்படும் மின் சக்தியினைக் கொண்டு அதனை அருகாமையிலுள்ள தெரு விளக்குகளை எரிய வைக்க முயன்றால் மின் கட்டன சேமிப்பிற்கு வழி வகை செய்யும் என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வரைவு விரிவான திட்ட அறிக்கை (Draft Detailed Project Report) மற்றும் வரைவு ஒப்பந்தபுள்ளி (Draft Tender Documents) படிவங்கள் ஆகியவற்றினை இனைத்து அனுப்பியுள்ளார்.

எனவே இம்மாநகராட்சியின் டி.கே.மார்கெட், அண்ணா மார்கெட் மற்றும் எம்.ஜி.ஆர்.மார்கெட் ஆகிய மூன்று காய்கறி சந்தைகளில் சேகரமாகும் காய்கறி கழிவுகளைக்கொண்டு பையோ-மீத்தனேஷன் (Bio-Methanation Process) முறையில் அங்கு உருவாகும் காய்கறி கழிவுகளின் எடையிற்கேற்ப 3 மெட்ரிக் டன் / 5 மெட்ரிக் டன் / 10 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்புகளை இம்மாநகராட்சி நிதி மூலமோ அல்லது தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடனோ நிறுவி செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். முதற்கட்டமாக பரிட்சார்த்த முறையில் கவுண்டம்பாளையம் பகுதியில் புதிய மார்க்கெட் வளாகம் அமையும் பகுதியில் ஒரு அமைப்பினை ஏற்படுத்தலாம். அதன் தொடர்ச்சியாக மற்ற இடங்களிலும் அமைப்புகளை நிறுவலாம்.

ந.க.எண் 2684/2013/எம்.டி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள கோழிக்கடைகளின் கழிவுகளையும் பெற்று மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தவும், கோழிக்கழிவுகள் வழங்காத கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 3.29% அதிகமாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – சம்பந்தமாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் I பணியான பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர்சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டு தொகை ரூ.7500000/–ற்கு மாமன்ற தீர்மான எண். 334 நாள். 31.01.2013 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி 11.02.2013–ல் பெறப்பட்டது.

முதல் ஒப்பந்த அழைப்பான 15.03.2013 ல் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் கான்கீரிட் சாலை, தெரு விளக்கு, சாலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி | 70,19,618.07 | திரு. J.S.அசோசியேட், கோவை | 7371880.78 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 5.02% சதவீதம் அதிகம் |
| | | | திரு. N.S. பெரியசாமி அன் கோ, ஈரோடு | 7513525.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 7.04% சதவீதம் அதிகம் |
| | | | திரு.V.குப்புசாமி, நீலகிரி | 7515976.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 7.07% சதவீதம் அதிகம் |
| | | | **திரு. B. மோகன் ரெட்டி, வேலூர்** | **7250740.00** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 3.29% சதவீதம் அதிகம்** |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 3.29% கூடுதலாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விலை விகிதத்திற்கு 3.29% கூடுதலான ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1962 / 13 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டார் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு பணியாளர்கள் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 8.81% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – சம்பந்தமாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் I பணியான பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டார் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணியாளர்கள் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணிக்கு, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 7500000/– ற்கு மாமன்ற தீர்மான எண். 332 நாள். 31.01.2013ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி 11.02.2013–ல் பெறப்பட்டது.

முதல் ஒப்பந்த அழைப்பான 15.03.2013 ல் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் பணியாளர்கள் குடியிருப்பு A Block (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி | 64,23,815.03 | தி/ள். J.S.அசோசியேட், கோவை | 6759340.74 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 5.22% சதவீதம் அதிகம் |
| | | | தி/ள். N.S. பெரியசாமி அன் கோ, ஈரோடு | 7243570.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 12.76% சதவீதம் அதிகம் |
| | | | திரு.V.குப்புசாமி, நீலகிரி | 7562680.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 17.73% சதவீதம் அதிகம் |
| | | | **திரு. B. மோகன் ரெட்டி, வேலூர்** | **5857755.00** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 8.81% சதவீதம் குறைவு** |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 8.81% குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விலை விகிதத்திற்கு 8.81% குறைவான ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1963 / 13 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டார் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு பொறியாளர்கள் குடியிருப்பு (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 4.38% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – சம்பந்தமாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் I பணியான பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றின் நீரேற்று நிலையத்தில் 24 மணி நேரம் மோட்டார் இயந்திரங்கள் இயங்க வேண்டியுள்ளதால் பணியாளர்கள் அங்கு தங்கி பார்வையிட்டு இயக்கி பராமரிக்கும் பொருட்டு மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பொறியாளர்கள் குடியிருப்பு (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணிக்கு, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7500000/– ற்கு மாமன்ற தீர்மான எண். 333 நாள். 31.01.2013ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி 11.02.2013–ல் பெறப்பட்டது.

முதல் ஒப்பந்த அழைப்பான 15.03.2013 ல் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை நிலையத்தில் பொறியாளர்கள் குடியிருப்பு (கீழ்தளம் மற்றும் முதல் தளம்) கட்டுதல் பணி | 62,46,685.51 | தி/ள். J.S.அசோசியேட், கோவை | 6564958.17 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 5.10% சதவீதம் அதிகம் |
| | | | தி/ள். N.S. பெரியசாமி அன் கோ, ஈரோடு | 7009775.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 12.22% சதவீதம் அதிகம் |
| | | | திரு.V.குப்புசாமி, நீலகிரி | 7570694.50 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 21.20% சதவீதம் அதிகம் |
| | | | **திரு. B. மோகன் ரெட்டி, வேலூர்** | **5973170.00** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.38% சதவீதம் குறைவு** |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 4.38% குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விலை விகிதத்திற்கு 4.38% குறைவான ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1960 / 13 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் வன விலங்குகள் வருவதால் அப்பகுதியில் பாதுகாப்பிற்காக மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் தலைமை நீரேற்று வளாகத்தைச் சுற்றி சுற்றுசுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 1.86% குறைவாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – சம்பந்தமாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் I பணியான பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் வன விலங்குகள் வருவதால் அப்பகுதியில் பாதுகாப்பிற்காக மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் தலைமை நீரேற்று வளாகத்தைச் சுற்றி சுற்றுசுவர் கட்டும் பணிக்கு, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7500000/– ற்கு மாமன்ற தீர்மான எண். 325 நாள். 31.01.2013–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி 11.02.2013–ல் பெறப்பட்டது.

முதல் ஒப்பந்த அழைப்பான 15.03.2013 ல் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், புதியதாக நீர் சேகரிப்பு கிணறு, நீரேற்று அறை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் வன விலங்குகள் வருவதால் அப்பகுதியில் பாதுகாப்பிற்காக நிலையத்தினை சுற்றி சுற்றுசுவர் கட்டும் பணி | 72,45,489.30 | திி/ள். J.S.அசோசியேட், கோவை | 7740048.33 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 6.83% சதவீதம் அதிகம் |
| | | | தி/ள். N.S. பெரியசாமி அன் கோ, ஈரோடு | 8101030.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 11.81% சதவீதம் அதிகம் |
| | | | திரு. V.குப்புசாமி, நீலகிரி | 7565106.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.41% சதவீதம் அதிகம் |
| | | | **திரு. B. மோகன் ரெட்டி, வேலூர்** | **7110740.00** | **ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1.86% சதவீதம் குறைவு** |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு **1.86%** குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விலை விகிதத்திற்கு **1.86%** குறைவான ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கியுள்ள திரு. B. மோகன் ரெட்டி, வேலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: **1961 / 13**/ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013–2016** ஆண்டுக்கான பொது ஏலம்/மின் ஏலம் **13.03.2013** மற்றும் **28.02.2013** அன்று நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ.எண் | இனம் | அரசாங்க மதிப்பு | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் கோரிய உயர்ந்தப்பட்ச ஏலத்தொகை | மின் ஏலம் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | உக்கடம் ஆடு அறுவை மனை | 7,86,500/– | ரஹமத்துல்லா<br>சி.ஆர். நடராஜன்<br>என். கந்தசாமி | 7,87,500/–<br>7,90,000/–<br>7,91,500/– | – |
| 2. | லாரி பேட்டை நவீன கழிப்பிடம் | 55,000/– | முகம்மது ரபிக் | 62,000/– | – |
| 3. | வார்டு எண் 91 குளத்துப்பாளையம் கழிப்பிடம் | 73,000/– | கணேஷ் குமார்<br>ஆர். தேவராஜ் | 91,250/–<br>47,000/– | – |

வரிசை எண் **1** ல் உள்ள உக்கடம் ஆடு அறுவை மனைக்கு **13.03.2013** அன்று நடைபெற்ற பொது ஏலம் / மின் ஏலத்தில் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் ரூ. **5,000/–** அதிகமாக ஏலம் கோரியுள்ளார். எனவே திரு என்.கந்தசாமி என்பவருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **31.03.2013** ம் தேதிய முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டது.

வரிசை எண் **2** உள்ள லாரிபேட்டை நவீன கழிப்பிடத்திற்கு **13.03.2013** அன்று நடைபெற்ற பொது ஏலம் / மின் ஏலத்தில் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் ரூ. **7,000/–** அதிகமாக ஏலம் கோரியுள்ளார். எனவே திரு முகம்மது ரபிக் என்பவருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **31.03.2013** ம் தேதிய முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டது.

வரிசை எண் **3** உள்ள வார்டு எண் **91** குளத்துப்பாளையம் கழிப்பிடத்திற்கு **28.02.2013** அன்று நடைபெற்ற பொது ஏலம் / மின் ஏலத்தில் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் ரூ. **18,250/–** அதிகமாக ஏலம் கோரியுள்ளார். எனவே கணேஷ்குமார் என்பவருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **31.03.2013** ம் தேதிய முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டது.

எனவே மூன்று இனங்களுக்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின் ஏற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதியளிக்கலாம் — ந.க. எண்: **698/2012**/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013–2016** ஆண்டுக்கான பொது ஏலம்/மின் ஏலம் **27.03.2013** அன்று நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ.எண் | இனம் | அரசாங்க மதிப்பு | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் உயர்ந்தப்பட்ட ஏலத்தொகை | மின் ஏலம் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| **1.** | செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை | **3,00,000/–** | பி.ஷெரீப்<br>ஜே.பஷீர் | **2,90,000/–**<br>**2,95,000/–** | **–** |

வரிசை எண் **1** ல் உள்ள செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை அரசாங்க மதிப்பைக் காட்டிலும் ரூ. **5,000/–** மட்டும் குறைவாக உள்ளது. ஏற்கனவே எடுத்துள்ள நபர் வரும் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தல் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அரசாங்க மதிப்பைக் காட்டிலும் ரூ. **5,000/–** மட்டுமே குறைவாக ஏலம் கோரிய திரு. ஜே.பஷீர் என்பவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் **31.03.2013** முன்அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டது. எனவே மேற்படி செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை இனத்திற்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின் ஏற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதியளிக்கலாம் ந.க. எண்: **698/2012/அ1**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் ஆடு அறுவைமனை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- குத்தகை இனங்கள்- 01.04.2013 முதல் 30.06.2013 –மூன்று மாதத்திற்கு ஒப்படைக்க – மாமன்றத்தின் பின்னேற்பு உத்தரவு பெறுதல் -தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் வார்டு எண் 64 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்திமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மாமன்ற தீர்மான எண். 369 நாள். 31.01.2013-ன் படி திரு.குமரேசன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 2013-2014-ம் ஆண்டிற்கு உண்டான குத்தகை தொகை மற்றும் இதர தொகைகள் சேர்ந்து மொத்தம் 31,93,811/- செலுத்த கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் இதனை தொடர்ந்து நடத்த இயலாது என்று விண்ணப்பம் வழங்கியுள்ளார்.

தற்போது இறுதி கட்ட வருடாந்திர குத்தகை இனம் ஏலம் விடப்படும் தருவாயில் இவ்வினத்தை நடத்த இயலாது என கூறியுள்ளது மாநகராட்சி மற்றும் மன்றத்தினை அவமதிப்பு செய்வது போன்ற செயல் என்பதால் மேற்படி இனத்திற்கு செலுத்திய தொகை ரூ.97500/- ஐ பறிமுதல் செய்தும் மாநகராட்சி சம்மந்தப்பட்ட ஏல இனங்களில் திரு.குமரேசன் கலந்து கொள்ள கூடாது என்றும் கருப்பு பட்டியலில் சேர்க்கவும், இவ்வினத்தினை சிறப்பு இனமாக கருதி நாளேட்டில் விளம்பரம் செய்யவும் உத்தரவு வேண்டப்படுகிறது.

மேலும் ஆணையாளர் அவர்களின் 21.03.2013-ம் தேதிய உத்திரவின்படி திரு.குமரேசன் அவர்களின் பெயரை கருப்பு பட்டியலில் சேர்க்கவும், செலுத்திய தொகையை பறிமுதல் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் கடந்த ஆண்டு குத்தகை இனத்தை மேற்கொண்ட திரு. ரங்கராஜ் என்பவருக்கு 01.04.2013 முதல் 30.06.2013 வரை மூன்று மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும், வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 28.03.2013-ம் தேதிய உத்திரவின்படி முன் அனுமதி வழங்கப்பட்டு திரு.ரங்கராஜ் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொகை செலுத்தப்பட்டதை தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக பின்னேற்பு பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 02921/2013/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - 01.04.2013 முதல் 31.03.2016ம் ஆண்டு வரை ஒப்படைக்க - மாமன்றத்தின் பின்னேற்பு உத்தரவு பெறுதல் - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் சாா்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 27.03.2013-ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்தில் 01.04.2013 முதல் 31.03.2016 வரை ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.

*__இனங்கள்__*

1. சிங்காநல்லூா் வார/தினசரி சந்தையில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவா்களின் பெயா் | ஒப்புந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மின் ஏலம் கேள்வித் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.எம்.செந்தில்குமாா் | 6,00,102/– | … |
| 2. | திரு.வி.கதிரவன் | 5,60,000/– | … |

மேற்படி குத்தகை இனத்திற்கு அரசு மதிப்புத் தொகையாக ரூ.5,50,000,- நிா்ணயம் செய்யப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.எம்.செந்தில்குமாா் என்பவா் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.6,00,102/-க்கு கோரியுள்ளாா். மின் ஏலத்தொகை கோரவில்லை.

மேலும், இக்குத்தகை இனம் ஐந்து முறை ஏலம் விடப்பட்டு அரசு நிா்ணயித்த ரூ.5,50,000, தொகையைக் காட்டிலும், குறைந்தபட்ச தொகையாக இருந்ததால் மறு ஏலம் கோரியதை முடிவு செய்யுவும், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச ஏலம் கோரிய திரு.எஸ்.எம்.செந்தில்குமாா் என்பவருக்கு ஒப்படைப்பு செய்வது தொடா்பாகவும் ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள் 28.03.2013 அன்று முன் அனுமதி பெறப்பட்டு ஏலதாரருக்கு அறிவிப்பு வழங்கி தொகை செலுத்தப்பட்டது.

எனவே இப்பொருள் குறித்து பின்னேற்பு பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள்வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 014902/2012/கிஅ11

**__மாநகர மன்ற தீா்மானம் எண் 14 நாள் 25.04.2013__**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி பில்லூா் இரண்டாவது குடிநீா் திட்ட பிரதான குழாய் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடா்பாக

-------------------------

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.03.2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தோ்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரா் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4727/2012 / ஜெ.என் 5 | கோயம்புத்தூா் மாநகராட்சி பில்லூா் இரண்டாவது குடிநீா் திட்ட பிரதான குழாய் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 21.20 | 04.03.2013 இரண்டாவது அழைப்பு | 1.. தி /ள். மகாலட்சுமி அன் கோ, கோயம்புத்தூா் 21.15% அதிகம் 2.. தி /ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டா்பிரைசஸ் கோயம்புத்தூா் 4.66% அதிகம் | தி /ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டா்பிரைசஸ் கோயம்புத்தூா் 4.51% அதிகம் (விலைக் குறைப்பிற்குப்பின் ) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

வரிசை எண்.1ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4727/2012/ஜெ.என் 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வ.உ.சி. உயிரியல் பூங்கா- புதிய இடம் தேர்வு செய்தல் - தொடர்பாக

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி. உயிரியல் பூங்காவில், இடவசதி இல்லாத காரணத்தால் மத்திய உயிரியல் பூங்கா ஆணையம், டெல்லி அவர்களின் அறிவுரைப்படி, தற்போது புதிய இடம் தேர்வு செய்து மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்திற்கு தெரிவிக்கும் பொருட்டு வ.உ.சி. உயிரியல் பூங்காவிற்கு அருகில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் உள்ள 45.25 ஏக்கர் பரப்பளவில் 25 ஏக்கர் நிலத்தில் உயிரியல் பூங்கா அமைக்க அதற்கான பரிந்துரை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஆணை கிடைக்கப் பெற்றவுடன் மேற்கண்ட இடத்தில் உயிரியல் பூங்கா அமைக்கவும், அதற்கான பிரேரனை டெல்லி மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்திற்கு அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 3711/2013/ எம்.இ. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அரசு மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள, கனரக வாகனங்கள், பேருந்துகள், நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்கள் இடைவிடாது செல்லும் தேசிய நெடுங்சாலையினை பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவமனைக்கு வரும், ரயில் நிலையத்திலிருந்து வரும் பயணிகள், நோயாளிகள் இடையூறின்றி கடக்கும் வகையில் நடைபாதை மேம்பாலம் அமைக்க மாமன்ற தீர்மானம் எண் 277 நாள் 30.11.2011ன்படி தமிழ்நாடு நகர்புர கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் பரிந்துரையின்படி, அசோசியேட்ஸ் நிறுவனத்தினர் மூலம் அரசு மருத்துவமனை அருகில் ரூ. 72.60 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின் இடையூறின்றி பாதுகாப்புடன் சாலையினை கடக்கும் வகையில் அரசு மருத்துவமனை அருகில் தேசிய நெடுஞ்சாலைத் துறையினருக்குச் சொந்தமான சாலையில் ரூ. 72.60 இலட்சம் செலவில் நடைபாதை மேம்பாலம் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 10338/2012/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகனம் TN66-B3031 ஸ்கார்பியோ ஈப்பு கடந்த 11.06.2010 அன்று வாங்கப்பட்டு மேற்படி வாகனம் இதுநாள்வரை 40000 கிலோமீட்டர் தூரம் ஓடியுள்ளது. மேற்படி வாகனம் அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோருடன் கள ஆய்வுக்கு செல்லும்பொழுது பழுதுகள் ஏற்படுவதால் இடையூறு ஏற்படுகிறது.

இதேபோல் துணை மேயர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகனம் TN37-AT6100 டாடா சுமோ ஈப்பு வாங்கப்பட்டு 6 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதன் காரணத்தினால் இவ்வாகனமும் கள ஆய்வுக்கு செல்லும்பொழுது அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது.

எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஆய்வு வாகனம் TN66-B3031 ஐ துணை மேயர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தும், துணை மேயர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகனம் TN37-AT6100 டாடா சுமோ ஈப்பினை இம்மாநகராட்சியின் ஏதேனும் ஓர் முதல்நிலை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்தும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அலுவலக ஆய்வு பணிகளுக்கென ஓர் புதிய இன்னோவா (INNOVA CAR) இண்டர் கூலர் வாகனத்தினை ரூ.18,00,000/- செலவினத்தில் DGS&D விலை விகிதத்திலோ அல்லது அரசு நிறுவனங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்பு விலை விகிதத்திலோ வாங்குவதற்கு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 3332/2013/எம்.டி. 2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2013 முதல் 31.03.2014 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் – தொடர்பாக

* * * * * * *

மாநகராட்சி மன்ற தீர்மான எண். 5 நாள். 27.04.2012–ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.11,001/– (அனைத்து வரிகளும் சேர்த்து) என நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.12 முதல் 31.03.2013 முடிய பணிபுரிய உத்திரவிடப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் 31.03.2013 உடன் முடிவடைகிறது. இதில் தற்போது 10 ஓட்டுநர்கள் மட்டுமே 31.03.2013ம் தேதியன்று பணிபுரிந்து வருகிறார்கள். அதற்கான விபரப்பட்டியல் பின்வருமாறு:

| வ. எண். | ஓட்டுநர் பெயர் | வாகனம் எண். | வாகனம் வகை | மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | எ. மரிய சிங்கம் | TN 37 AY 9037 | Bolero Jeep | பிரதான அலுவலகம் |
| 2 | கே. முரளிதரதன் | TN 37 3745 | Water Tanker Lorry | கிழக்கு |
| 3 | டி. சிவராஜ் | TN 37A 0737 | Open Body Lorry | மத்தியம் |
| 4 | எஸ்.வி. செல்லத்துரை | TN 37 S 3282 | Single Bin Dumper Placer | மத்தியம் |
| 5 | வி.எஸ். நடராஜ் | TN 37 Y 0207 | Single Bin Dumper Placer | மத்தியம் |
| 6 | டி.சுகுமார் சிங் | TAB 9091 | Water Tanker Lorry | கிழக்கு |
| 7 | எம். சுகுமாறன் | TDI 4174 | Open Body Lorry | மேற்கு (HLR) |
| 8 | பி. பவுலோஸ் | TN 37 E 6697 | Open Body Lorry | வடக்கு |
| 9 | எஸ். சந்திரன் | TN 37 Q 0904 | Open Body Lorry | மத்தியம் |
| 10 | எம். சிவசக்திவேல் | TN 37 BB 0631 | Open Body Lorry | மேற்கு |

டெக்ஸ்கோ நிறுவனத்தினர் தங்களது கடித எண். TEXCO/801/MC/ CBE/A6/2013, நாள். 20.03.2013– ல் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2013 முதல் 31.03.2014 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து தருமாறும், அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 12,888/– (சேவைக்கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவைவரி 12.36% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறும் கேட்டுள்ளனர்

எனவே, மாதாந்திர ஊதியத்தில் 10 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2013 முதல் 31.03.2014 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஒப்பந்த நீடிப்பு செய்யவும், இதற்காகும் செலவினம் ரூ.15,46,560/–க்கு ஒப்புதல் பெறவும், 01.04.2013 முதல் பணிபுரிந்து வருவதற்கு பின்னேற்பு பெறவும் மாமன்றத்திற்குப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7480/2010/எம்சி7

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை, விருப்ப கேட்பு அறிக்கை பொது நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிக்கு விருப்ப கேட்பு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள விருப்ப கேட்பு அறிக்கையினை திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்ட பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | விருப்ப கேட்பு அறிக்கை நாள் | பெறப்பட்ட விருப்ப கேட்பு நிறுவனத்தின் ஆலோசணை கட்டணம் சதவிகிதத்தில் | தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஆலோசணை கட்டணம் சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 8314/12/ எம்.டி4 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.90%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில 2.80%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 3.00% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.90% |
| 2 | 8314/12/ எம்.டி4 | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1..தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.85%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 2.80%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 3.00% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.85% |
| 3 | 831412/ எம்.டி4 | மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் மாமன்ற கூடம் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 3.50%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 5.00% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |
| 4 | 8314/12/ எம்.டி4 | மாநகராட்சி புதிய தெற்கு மண்டல அலுவலம் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 3.50%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 5.00% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |
| 5 | 3384/12/ எம்.டி4 | குறிச்சி பேருந்து நிலையம் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 2.80%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 3.50% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 8314/12/ எம்.டி4 | வார்டு எண் 97 சுந்தராபுரம் பகுதியில் தக்காளி மார்க்கெட் வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 2.80%<br>3. தி/ள். கியூப்பாய்டு கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 5.00% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |
| 7. | 8314/12/ எம்.டி4 | வார்டு எண் 10 மேட்டுப்பாளையம் சாலை பகுதியில் மொத்த வியாபார காய்கறி சந்தை (எம்.ஜி.ஆர். மார்க்கெட்) வடிவமைத்தல். | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.95% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |
| 8. | 8314/12/ எம்.டி4 | வார்டு எண் 10 மேட்டுப்பாளையம் சாலை பகுதியில் காய்கறி சந்தை (அண்ணா மார்க்கெட்) வடிவமைத்தல் | 18.01.2013 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25%<br>2. தி/ள். சி.ஒ.எஸ் கன்சல்டென்சி கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 2.25% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |
| 9 | 10368/12 /எம்.டி1 | வார்டு எண் 16 வடவள்ளி பகுதியில் புதிய பேருந்து திருப்பு முனையம் அமைத்தல் | 24.12.2012 (முதல் அழைப்பு) | 1. தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 1.25% |

மேற்கண்ட பணிகளுக்காக பெறப்பட்ட விருப்பு கேட்பு அறிக்கைகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : – அனுமதிக்கலாம். ந.க.எண். 8314/12/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 25.04.2013**

பொருளில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 3 –ல் உள்ள மத்திய மண்டல அலுவலகத்தில் மாமன்றக்கூடம் வடிவமைத்தல் என்பதற்கு பதிலாக மைய அலுவலக வளாகத்தில் மாமன்றக் கூடம் வடிவமைத்தல் என திருத்தம் செய்தும், வடவள்ளி பேருந்து திருப்பு முனையம் அமைப்பது தொடர்பான வரிசை எண் 9-ஐ ஒத்திவைத்தும், மற்ற பணிகளை அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடை – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட மாதாந்திர வாடகை இனத்திற்கு 07.03.2013-ம் தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | 21.02.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் ரூ. | 07.03.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் ரூ. |
|---|---|---|---|
| அ | டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாக கடை எண்.18. (அரசு மதிப்பு ரூ.27,777/–) | ரூ.11,900/- திரு.J.M.சசிவ்ாண்ணன் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.15,500/- திருமதி.M.சாந்தி (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஏழாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ 27,777/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.15,500/-க்கு திருமதி.M.சாந்தி அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி இனம் ஏழாவது முறையாக ஏலம் கோரப்பட்டுள்ளதாலும் டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாகத்தில் உள்ள மற்ற கடைகளின் சராசரி வாடகை ரூ 7522/- முதல் ரூ 11,621/- வரை உள்ளதாலும் இவ்வினத்தை ஒப்படை செய்ய வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 25.03.2013 அன்று பெறப்பட்டது. எனவே இவ்வினத்தை ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பின்னேற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 22**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி நாள்.28.03.2013.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013, 28.02.2013 மற்றும் 27.03.2013 ஆகிய நாட்களில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. கீழ்குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 13.03.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | 27.03.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ1,49,000/– | திரு.பி.ஏ.பத்ருதீன்<br>திரு. பி முகமது ரபி | 1,11,000/–<br>– | <br>1,51,000/– |
| 2 | ராமர் கோவில் வீதி மார்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ33,19,900/– | திரு.எம்.ஏ.சபேர் அலி | 27,09,999/– | 27,65,000/– |
| 3 | சீனிவாசபுரம் கிராஸ்கட் ரோட்டில் உள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம்<br>அரசு நிர்ணய மதிப்பீடு ரூ31,52,100/– | திரு.எம்.ஏ.சபேர் அலி<br>எம்.ஹரிகிருஷ்ணன் | 20,50,000/–<br>– | <br>24,03,000/– |

மேற்படி குத்தகை இனங்களில் வரிசை எண்.1-ல் திரு. பி முகமது ரபி என்பவரிடமிருந்து அரசு நிர்ணயம் செய்த மதிப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. வரிசை எண்.2 மற்றும் 3-ல் அரசு மதிப்பீட்டை காட்டிலும் குறைவாக இருப்பினும், மாநகராட்சி ஏற்கும் பட்சத்தில் போதுமான பணியாளர்கள் இல்லாததாலும் இவ்விரு இனங்களிலும் சேவை வரி செலுத்த வேண்டிய நிலையில் உள்ளதாலும் தற்போது பெறப்பட்ட ஏலக்கோரிக்கையினை ஏற்று வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி 28.03.2013 ல் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இனங்களை ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பின்னேற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: : அனுமதியளிக்கலாம் ந.க.எண் 11130/12/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – **08.05.2013** மற்றும் **09.05.2013** ஆகிய இரண்டு நாட்கள் காட்மாண்ட், நேபாள நாட்டில் நடைபெற உள்ள Testrun for Cities and Climate Change Training and new Governance Training for Partners – கூட்டத்தில் ஆணையர் அவர்கள் பங்குபெற – அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| பார்வை | முதுநிலை மேலாளர் , Cities Development Initiative for Asia, அவர்களின் கடித நாள். **22.03.2013.** |

-----

பார்வையில் காணும் கடிதத்தில் **08.05.2013** மற்றும் **09.05.2013** ஆகிய இரண்டு நாட்கள் காட்மாண்ட், நேபாள நாட்டில் நடைபெற உள்ள Testrun for Cities and Climate Change Training and new Governance Training for Partners ல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் ஆணையாளர் அவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்காகும் மொத்த செலவினம் Cities Development Initiative for Asia அவர்களால் எற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆணையர் அவர்கள் மேற்கண்ட மாநாட்டில் கலந்துகொள்ள அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.**109/2011**/எம்.சி.**6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

பார்வை: திரு.எம்.மாரிமுத்து, மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.**27** அவர்களின் கடிதம் நாள்.**16.04.2013.**

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வடக்கு மண்டலம், வார்டு எண்.**27**, சின்னவேடம்பட்டி பகுதியில் உள்ள காலனி க.ச.எண்.**38** ல், சின்னவேடம்பட்டி பேரூராட்சியாக இருந்த போது கட்டப்பட்ட **20** எண்ணிக்கையிலான தொகுப்பு வீடுகள் தற்பொழுது மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்து தருமாறு திரு.எம்.மாரிமுத்து, மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.**27** அவர்கள் கேட்டு கொண்டுள்ளார்.

எனவே, பழுதடைந்துள்ள மேற்படி தொகுப்பு வீடுகளை மாநகராட்சி நிதி மூலம் பராமரிப்பு செய்து தர உரிய உத்தரவுகள் வழங்க கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். /**2013**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் புதியதாக இணைக்கப்பட்ட 40 வார்டுகளிலும் உள்ள பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை கண்டறிந்து பராமரிப்பு செய்ய உத்திரவு வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம் – வடவள்ளி கிராமம் க.ச.**72/2** எ(**1**)ல் உள்ள **47** சென்ட் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |
| பார்வை: | மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**29284/2010**/ஆ**3**, நாள்.**25.07.2011.** |

*******

கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம் வடவள்ளி கிராமம் க.ச.**72/2** எ(**1**)ல் உள்ள **47** சென்ட் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்கி பார்வையில் காண் மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான செலவினம் ரூ.**2.80** கோடி நிதி ஒதுக்கீடு செய்ய அரசுச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே, கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வடவள்ளி கிராமம் க.ச.72/2 எ(1)ல் உள்ள 47 சென்ட் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும், அதற்கான நிதியினை உள் கட்டமைப்பு நிதியிலிருந்து வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையிடமிருந்து பெற்று பணிகளை துவங்க உரிய உத்தரவுகள் வழங்க கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.10362/2012/(எம்.டி.1) /எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 25.04.2013**

பொருள் ஒத்திவைக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.426.04 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 70 எம்.எல்.டி கொள்ளளவுள்ள உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில், கடந்த 07.01.2011 முதல் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது (2008–2010) பணிகளின் தரம் குறித்த ஆய்வு மற்றும் வரைபடங்கள் (Drawings) அடங்கிய வடிவமைப்புகளை (Designs) சரிபார்த்து, இறுதி செய்து தரும் பணிகளை “அரசு பொறியியல் கல்லூரி ” (Government College of Technology, Coimbatore)–யின் முதல்வர் மற்றும் பேராசியர்கள் அடங்கிய தொழில் நுட்ப குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் உரிய தரத்தில், தொய்வின்றி குறிப்பிட்ட திட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டது.

தற்போது ஒண்டிப்புதூர் பகுதியில் 60 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு, ஒப்பந்த நிறுவனத்தால் சர்வே செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வே செய்யும் பணி முடிவுற்றவுடன் ஒப்பந்த நிறுவனத்தால் வழங்கப்படவுள்ள வரைபடங்கள் (Drawings) மற்றும் வடிவமைப்புகள் (Designs) ஆகியவற்றை இறுதி செய்து தரும் பணிகளுக்காக “ மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு முகமையாக (Third Party Quality Assurance Agency) ” அரசு பொறியியல் கல்லூரி, கோவை (GCT, Coimbatore) யின் முதல்வர் மற்றும் பேராசியர்கள் அடங்கிய தொழில் நுட்ப குழுவினை நியமனம் செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிக்காக, தள ஆய்வு மற்றும் ஆலோசனை கட்டணமாக கீழ்கண்டவாறு தொகை வழங்க முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, கோவை அவர்களால் கோரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தள ஆய்வு மற்றும் ஆலோசனை கட்டணம் (Consultancy Charges) | திட்ட மதிப்பில் 0.50 % |
| 2. | சேவை வரி (Service Tax) | ஆலோசனை கட்டணத்தில் 12 % |
| 3. | கல்வி வரி (Educational Cess) | சேவை வரியில் 3 % |

அதன்படி மேற்படி அரசு பொறியியல் கல்லூரிக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தள ஆய்வு மற்றும் ஆலோசனை கட்டணம் (Consultancy Charges) | ரூ. 33,91,177 |
| 2. | சேவை வரி (Service Tax) | ரூ. 4,06,941 |
| 3. | கல்வி வரி (Educational Cess) | ரூ. 12,208 |
| | மொத்தம் | ரூ. 38,10,326 |

மேற்கண்ட தொகையினை தள ஆய்வு மற்றும் ஆலோசனை கட்டணமாக அரசு பொறியியல் கல்லூரிக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

| | |
|---|---|
| **அ** | ஒண்டிபுதூர் பகுதியில் புதியதாக அமைக்கப்படவுள்ள **60** எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நவீன சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிக்கு, ''மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு முகமையாக (Third Party Quality Assurance Agency) " கோவை அரசு பொறியியல் கல்லூரியின் பொறியியல் வல்லுனர்கள் அடங்கிய தொழில் நுட்ப குழுவினை நியமனம் செய்து கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| **ஆ** | மேற்படி பணிக்கு தள ஆய்வு மறுறும் ஆலோசனை கட்டணமாக ரூ. **38,10,326/–** ஐ (ரூபாய் முப்பத்தியெட்டு இலட்சத்து பத்தாயிரத்து முன்னூற்று இருபத்து ஆறு மட்டும்) அரசு பொறியியல் கல்லூரி, கோவை (GCT,Coimbatore) **–** க்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| ☐ | மேற்படி செலவீனம் ரூ.**38,10,326/–** ஐ ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம். |

ந.க. எண் :3669/2013/ஜே என் 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பு அ , ஆ மற்றும் இ-க்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 27

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு – அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் யோகா பயிற்சி அளித்தல் – தொடர்பாக.

********

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **2013–14**ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்ட அறிக்கையில் துப்புரவுப் பணியாளர்கள் நலம் பேணுதல் தொடர்பாக துப்புரவு பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டும் அவர்களின் உடல் ஆரோக்கியத்தினையும் கருத்தில் கொண்டு யோகா பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யோகா பயிற்சி அளிப்பது தொடர்பாக கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது.

1) வாழ்க வளமுடன் – மனவளக்கலை டிராஸ்ட்
2) வாழும் கலை
3) ஈஷாயோகா மையம்

அதில், ஈஷா யோகா மையம் அவர்கள் இலவசமாக யோகா பயிற்சி அளிப்பதாக தெரிவித்த தகவலின்படி ஈஷா யோகா மையம் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் மூலம் அனைத்து மண்டலங்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் யோகா பயிற்சி அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். **3496/2013/** எம்.இ.**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 27 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 28

பொருள்:- மருத்துவ சேவை - கோயம்புத்தூர் மாநகராட்சி – 6 நகர் நல மையங்களில் மகப்பேறு தொடர்பான மருத்துவ சேவைகளை மேம்படுத்துவது - தொடர்பாக.

பார்வை - 2013-14 ம் ஆண்டின் மாநகராட்சி வரவு செலவு அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பு

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 6 நகர் நல மையங்களில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகளை மேம்படுத்தி கீழ்வரும் சேவைகளையும் அளிக்கலாம் என கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பார்வையில் காணும் வரவு செலவு திட்ட உரையில் தெரிவித்துள்ளார்.

1) ஸ்கேன் பரிசோதனை 2) மகப்பேறு சிகிச்சைகள் 3) அறுவை அரங்கு 4) குடும்ப நல அறுவை சிகிச்சை 5) கருத்தடை வளையம் பொருத்துதல், 6) தடுப்பூசிப்பணிகள் 7) காய்ச்சல் மற்றும் தொற்று நோய் கண்காணிப்புப் பணிகள் மற்றும் இ.சி.ஜி பரிசோதனை மையம் மேலும் இதற்காக வரவு செலவு திட்டத்தில் ரூ. 50.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ சேவை மேம்பாட்டுப்பணிகள் 6 நகர்நல மையங்களில் தொடர்ந்து சிறந்த முறையில் செயல்படுத்த ஒரு மருத்துவ தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி அரசு மற்றும் தனியார் மருத்துவத்துறையைச் சார்ந்த 8 அலுவலர்கள் தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் மருத்துவ சேவை மேம்பாட்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதில் ஒத்துழைப்பார்கள்.

எனவே 6 நகர்நல மையங்களில் மேற்படி மருத்துவ சேவை மேம்பாட்டுப்பணிகளை தொடர்ந்து சிறந்த முறையில் செயல்படுத்த இப்பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ. 50.00 லட்சம் செலவில் வாங்கி வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 3504/2013/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 28 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்தல் – மாமன்றத்தின் அனுமதி பெறுவது – தொடர்பாக.

********

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **2013–14**ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டத்தில் துப்புரவுப் பணியாளர்களின் உடல் நலன் கருதி அதிநவீன முழு உடல் நலப் பரிசோதனைகள் (Master Health Check-up) செய்ய ரூ.**25** லட்சம் ஒதுக்கீடு செய்து தனியார் மருத்துவமனைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்ய **1)** P.S.G மருத்துவமனை **2)** கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை **3)** ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை ஆகிய மூன்று தனியார் மருத்துவமனைகளிடமிருந்து விலைப்புள்ளி பட்டியல் பெறப்பட்டது.

இதில் P.S.G.மருத்துவமனை ஒரு நபருக்கு முழு உடல் பரிசோதனை செய்ய ரூ.**1500/–** என்ற குறைவான விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார்கள்.

எனவே, P.S.G மருத்துவமனையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் **2867** துப்புரவுப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்ய அனுமதியும், ஒரு நபருக்கு ரூ.1500/- வீதம் **2867** நபர்களுக்கு ரூ.**43,00,500/-** செலவினத்திற்கும் மற்றும் திட்ட மதிப்பீடு ரூ.**25.00**லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள கூடுதல் செலவுத் தொகை ரூ.**18,00,500/-**க்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். **3522 /2013/** எம்.இ. **3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 29 நாள் 25.04.2013</u>**

குறைந்த விலைப்புள்ளியான ரூ.1400-க்கு (ஆயிரத்து நானூறு ரூபாய் மட்டும்) விலைப்புள்ளிக்கு ஒப்புக்கொள்ளும் மருத்துவமனைகளுக்கு பணிஆணை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் 30

சென்னை மாநகராட்சியில் தினக்கூலிகள் மற்றும் குடிசைப் பகுதியில் வாழும் மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறிப்பிட்ட இடங்களை தேர்வு செய்து சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து சலுகை விலையில் தரமான உணவு அம்மா உணவகம் மூலம் வழங்க திட்டமிட்டு முதல் கட்டமாக 200 சிற்றுண்டி உணவகங்கள் திறந்து செயல்படுத்தி வருகின்றது.

கோயம்புத்தூர் மாநகரில் சிறு தொழில் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்வாதாரம், உணவுமுறை ஏற்றத்தாழவுகள் நிறைந்ததாக உள்ளது. இவர்களுக்கு சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தரமான உணவிகள் குறைவான விலையில் கிடைக்க வாய்ப்பு இல்லை.

தமிழகத்தில் சென்னையைத் தொடர்ந்து ஏனைய மாநகராட்சிகளிலும் இத்திட்டம் தொடங்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கோயம்புத்தூர் மாநகராட்சியில் இத்திட்டம் துவக்க முதற்கட்டமாக துவங்க பின்வரும் ஐந்து இடங்களில் "அம்மா உணவகம்" அமைக்க அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டுள்ளது. இதன் விவரம் பின் வருமாறு.

| வ.எண் | இடம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண் 64 - சிங்காநல்லூர் மாநகராட்சி பேருந்து நிலையம் | 9.95 |
| 2. | வார்டு எண் 24 - பூ மார்கெட் மேட்டுப்பாளையம் மெயின் ரோடு | 9.95 |
| 3. | வார்டு எண் 41 - மணியகாரன்பாளையம் மாநகராட்சி பள்ளி அருகில் | 25.00 |
| 4. | வார்டு எண் 98 - போத்தனூர் பேருந்து முனையகம் | 9.95 |
| 5. | வார்டு எண் 68 - ராமநாதபுரம் 80 அடி சாலை | 9.95 |

மேற்கண்ட இடங்களில் அம்மா உணவகம் அமைக்க உரிய கட்டிடங்களை மாற்றி அமைத்து கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண் 4489/ 2013/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 30 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தி.ள். எல்காட் நிறுவனம் வரை குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பதித்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

-------------------------

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 17.04.2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1987/2010 / ப.வ.(எம்) | இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தி.ள். எல்காட் நிறுவனம் வரை குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பதித்தல் | 1,92,60,000 | 11.03.2013 முதல் அழைப்பு | 1.. தி /ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் 9.49% அதிகம்<br>2.. திரு.ஆர். வேலுமணி கோயம்புத்தூர் 2.52% அதிகம் | திரு.ஆர். வேலுமணி கோயம்புத்தூர் 0.02% குறைவு (விலைக் குறைப்பிற்குப் பின் ) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி பணி டெபாசிட் தொகையில் மேற்கொள்ளும் பணியாக இருப்பதாலும், இப்பணி குறிப்பிட்டகாலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் பணியின் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4727/2012/ஜெ.என் 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 31 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

| | |
|---|---|
| **பொருள் :** | கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் பிரிவு - சொத்துவரி / காலியிடவரி கேட்பு அட்டை - தொலைந்துபோன சொத்துவரி/ காலியிடவரி கேட்பு அட்டைக்கான கட்டணம் ரூ.50/- ஆக நிர்ணயம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **பார்வை :** | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 08. நாள் 22.04.2013 |

புதிதாக உருவாக்கப்படும் சொத்துவரி விதிப்புகள் மற்றும் காலியிடவரி விதிப்புகளுக்கு கேட்பு அட்டை மாநகராட்சியால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி, வழங்கப்படும் கேட்பு அட்டை காணாமல் போனாலோ அல்லது கிழிந்து போனாலோ பழைய கேட்பு அட்டைக்கு பதில் புதிய கேட்பு அட்டையினை பெற தற்போது ரூ.10/- சொத்துரிமைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆகிவிட்ட காரணத்தினாலும், தற்போதுள்ள சூழ்நிலையில் அச்சடிக்கும் மை, காகிதம் போன்ற மூலப்பொருட்களின் விலைகள் மற்றும் தயாரிக்கும் செலவு கணிசமாக உயர்ந்துள்ளதாலும், கேட்பு அட்டையின் அடக்க விலை அதிகரித்துள்ளதாலும், மேற்படி கேட்பு அட்டையினை கொள்முதல் செய்ய நிர்வாகத்திற்கு ஏற்படும் கூடுதல் நிதிச்சுமையினை தவிர்க்கும் பொருட்டு காணாமல் போன அல்லது கிழிந்து போன சொத்துவரி கேட்பு புத்தகங்களுக்குப் பதிலாக வழங்கப்படும் கேட்பு அட்டையினை பெற வசூலிக்கப்படும் கட்டணத்தினை ரூ.10/- லிருந்து ரூ.50/- ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 08. நாள். 22.04.2013 –ன்படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்/ 5781 /2012 /எம்.ஏ.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 32 நாள் 25.04.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 8 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட 2013-2016-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைத்தல் - தொடர்பாக |
| பார்வை | வ.வி.நி.கு.எண். 17 நாள்.22.04.2013. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 17.04.2013 அன்று மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண | குத்தகை இனம் | ஏலதாரர் பெயர் | 27.03.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 17.04.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | உப்பிலிபாளையம் நவீன கட்டண கழிப்பிடம் அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.1,84,500/- | திரு.டி.வாசுதேவன் | 1,46,012/- | 1,52,006/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | உக்கடம் பேருந்து நிலையத்தில் தொலைக் காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.1,51,000/- | திரு.பி.ஏ.பத்ருதீன்<br>திரு. ஓ.ஏ.சையத் இப்ராஹிம் | 1,15,000/- | 1,55,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 3. | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் தொலைக் காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் . அரசுநிர்ணய மதிப்பீடு ரூ4,95,000/- | .<br>எஸ்.ராஜேஸ் குமார் | 4,50,000/- (மின் ஏலம்) | 7,10,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 4. | அரசு பொருட்காட்சி -2013 டாக்டர் நஞ்சப்பா ரோடு சிறைச்சாலை மைதானம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.1,576/- (நாள் ஒன்றுக்கு) | திரு. பி. கார்த்தி | ---- | 1,750/- (மின் ஏலம்) |

மேற்படி இனங்களில் வரிசை எண். 1 முதல் 4 வரை 4 இனங்களுக்கு 17.04.2013 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலத்தில் வரிசை எண்.1 உப்பிலிப்பாளையம் நவீன கட்டணகழிப்பிடம் உரிமத்திற்கு அரசுநிர்ணய மதிப்பீடு ரூ1,84,500/- காட்டிலும் குறைவாக திரு. டி.வாசுதேவன் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி ரூ.1,52,006/-ம், வரிசை எண்.2 உக்கடம் பேருந்து நிலையம் தொலைகாட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு அரசு நிர்ணய மதிப்பீடு ரூ1,51,000/- காட்டிலும் கூடுதலாக திரு. ஓ.ஏ.சையத் இப்ராஹிம் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி ரூ.1,55,000/-ம், வரிசை எண்.3 காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு அரசு நிர்ணய மதிப்பீடு ரூ4,95,000/- காட்டிலும் கூடுதலாக திரு.எஸ்.ராஜேஸ்குமார் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி ரூ7,10,000/-ம், மற்றும் வரிசை எண்.4. அரசு பொருட்காட்சி -2013 டாக்டர் நஞ்சப்பா ரோடு சிறைச்சாலை மைதானம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.1,576/-(நாள் ஒன்றுக்கு) காட்டிலும் கூடுதலாக ரூ.1,750/-(நாள் ஒன்றுக்கு) மின் ஏலம் திரு. பி. கார்த்தி ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே இவ்வினங்களுக்கு ஒப்படை செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 17 நாள். 22.04.2013-ல் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது என தீர்மானிக்கப்பட்டதை மாமான்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 33 நாள் 25.04.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 17 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 34

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம்- 2012-13-க்கான வணிகவளாக கடைகள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.03.2013-ல் நடைபெற்றது – ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

**பார்வை:** **1.** பொதுமறு ஏலம் நடைபெற்ற நாள்.19.03.2013.
**2.** ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.23.3.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி-மேற்கு மண்டல்ம வணிக வளாக கடைகளுக்கு 2012-14-ம் ஆண்டு பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.3.2013-ம் தேதியன்று மீண்டும் 7-வது முறையாக பொது மறுமின்ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

| வ. எண் | குத்தகை இனம் | அரசு நிர்ணய தொகை | 19.3.2013 அன்று நடைபெற்ற ஏலதாரர் பெயர் | 19.3.2013 அன்று நடைபெற்ற மின்ஏலக் கேள்வித் தொகை | 19.3.2013 அன்று நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளித் தொகை | 19.3.2013 அன்று நடைபெற்ற உயர்ந்தபட்ச மின்ஏலக் கேள்வி தொகை / ஒப்பந்தப் புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.5 ஓணாப்பாளையம் ரோடு (10 x 16) சதுரடி அளவுள்ள கடை எண்.4 | 6435 | ராஜீவ்காந்தி<br>பி.பாபு | 6400<br>- | 7450<br>6550 | 7450 |

மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கடையை ஒதுக்கீடு செய்ய ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 02 நாள்.22.04.2013-ல் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.1837/2013/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 34 நாள் 25.04.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 2 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 35

**பொருள் -** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.24 தடாகம் ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2013-14 (மூன்று மாதங்களுக்கு) உரிமம் வழங்குதல் -தொடர்பாக.

**பார்வை** – 1. குத்தகைதாரர் திரு.C.R.விநாயகம் அவர்களின் விண்ணப்ப நாள் 28.03.13
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.1.4.2013.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண்.24 தடாகம் ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் பார்வையில் காணும் குத்தகைதாரர் திரு.C.R.விநாயகம் என்பவருக்கு 2012-13-ம் ஆண்டில் மாமன்ற தீர்மான எண்.229/24.9.2012-ல் ரூ.5,06,000/-க்கு ஏலம் ஒதுக்கீடு பெற்று நடத்தி வருகிறார். தற்பொழுது தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுவதால் 2012-13-க்கு உண்டான 5% உயர்வு செய்த ஏலத்தொகை ரூ.5,13,300/-ஐ செலுத்த இயலவில்லை என்பதால் குத்தகை பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்குமாறும், மேலும் மறுஏலம் நடத்தும்வரை மூன்று மாதங்களுக்கு கடந்த ஆண்டு ஏலத்தொகையை செலுத்தி தொடர்ந்து குத்தகை நடத்துவதாக கோரியுள்ளார்.

எனவே மேற்கண்ட இனத்தை துறை மூலம் வசூல் செய்வதற்கு பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதாலும் வருவாய் நிதியிழப்பை தடுப்பதற்கும் மேற்கண்ட குத்தகைதாரருக்கு 2013-14-ம் ஆண்டிற்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்து 31.3.2012-ல் குத்தகைத்தொகை ரூ.1,32,825/-ஐ செலுத்தப்பட்டுள்ளது.

எனவே 2013-14-ம் ஆண்டிற்கு மூன்று மாதகாலத்திற்கு நீட்டிப்பு செய்தமைக்கும், மேற்கண்ட இனத்தை மறுஏலம் கோரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 04 நாள்.22.04.2013-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 35 நாள் 25.04.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 4 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 36

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 27.3.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

பார்வை: ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 26.12.2012, 23.1.2013, 13.2.2013, 28.2.2013 & 13.3.2013

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே 5 முறை 26.12.2012, 23.1.2013, 13.2.2013, 28.2.2013 &13.3.2013 தேதி ஏலம் நடைபெற்றது இவ்வினங்களை 28.3.2013-ம் தேதியன்று மீண்டும் 6-வது முறையாக பொது மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

6-வது முறையாக ஏலம் நடைபெற்ற தேதி – 28.3.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் | 2008-09 ஏலத் தொகை (ரூ) | 2009-10 ஏலத் தொகை (ரூ) | 2010-11 ஏலத் தொகை (ரூ) | 2011-12 5 % உயர்வு ஏலத் தொகை (ரூ) | 2012-13 5 % உயர்வு ஏலத் தொகை (ரூ) | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மார்க்கெட்டுக்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 10800999 | 8491715 | 10801000 | 11341050 | 11908102 | K.A.அபுதாஹிர்<br>M.மனோகரன்<br>பர்கத்அலி | -<br>-<br>- | 8100000<br>7700000<br>7200000 | 8100000 |

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 2013-14-ம் ஆண்டு இதுவரை 6 முறை (26.12.2012, 23.1.2013, 13.2.2013, 28.2.2013, 7.3.2013, 13.3.2013மற்றும் 27.3.2013) ஏலம் விடப்பட்டுள்ளது. இதில் 6 முறை ஏலம் விடப்பட்டு K.A.அபுதாஹிர் என்பவர் ரூ.81,00,000/- லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இது அரசு நிர்ணயத்தொகை (Base Value) ரூ.1,25,03,508/- விட குறைவாக உள்ளது. மேலும் இவ்வினத்திற்கு வருமான வரி ரூ.1,83,060/- சேவைவரி ரூ.10,01,160/- கோரியுள்ள ஏலத்தொகை ரூ.81,00,000/- மொத்தம் ரூ.92,84,220/- மற்றும் இவ்வினத்திற்கு துறைவாரியாக வசூல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் போதிய ஆட்கள் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது.

மேற்கண்ட இனத்திற்கு அரசு மதிப்பு (Base value) ரூ.1,25,03,503/- விட ஏலம் கோரிய தொகை ரூ.81,00,000/-ம் குறைவாக உள்ளதால் இது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைத்து நடவடிக்கை மேற்கொள்ள காலஅவகாசம் இல்லாததாலும், மாநகராட்சி துறைவாரியாக 1.4.2013 முதல் வசூல் பணி மேற்கொள்ள பணியாளர்கள் பற்றக்குறையாக உள்ளதாலும் வருவாய் இழப்பினை தவிர்க்கும்பொருட்டு ஒருமாத காலத்திற்கு (ஏப்ரல் மாதம்) ஏலம் கோரிய குத்தகைதாரர் திரு.அபுதாஹிர் அவர்கள் ரூ.10,00,000/- செலுத்தி மேற்கண்ட ஏல இனத்தினை நடத்திட வணக்கத்திற்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இனத்தை 2013-14-ம் ஆண்டிற்கு திரு.அபுதாஹிர் என்பவருக்கு ரூ.81,00,000/-ற்கு ஏலம் கோரியதை தொடர்ந்து மேற்படியாருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் . 05 நாள்.22.04.2013-ல் மேற்படி இனத்திற்கு தொடர்ந்து ஐந்து முறை ஏலம் விடப்பட்டும் 2010-2011-ஆம் ஆண்டு ஏலத்தொகையினை காட்டிலும் குறைவாகவே ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மத்திய அரசு கலால்துறைக்கு செலுத்தப்படவேண்டிய சேவைவரி 12.36% கூடுதலாக குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும் மேலும் துறைமூலம் வசூல் செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும் மற்றும் அவ்வாறு துறைமூலம் வசூல் செய்யப்படின் குறைவான வருவாய் மட்டுமே ஈட்ட இயலும் என்பதாலும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு உரிமத்தினை ஒப்படை செய்வதற்கு மாமன்றத்தின் முடிவிற்காக அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 25.04.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 5 நாள் 22.04.2013 ன் தீர்மானத்தை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 37**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் 2012-13-க்கான வணிகவளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 7.3.2013 நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக. |
| பார்வை | 1.. பொதுமறு ஏலம் நடைபெற்ற நாள்.7.03.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வணிகவளாக கடைகளுக்கு 2012-2013–ம் ஆண்டு பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 7.3.2013-ம் தேதியன்று மீண்டும் 5-வது முறையாக பொது மறுமின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

| வ. எண் | குத்தகை இனங்கள் | அரசு மதிப்பு | 7.3.2013 அன்று நடைபெற்ற ஏலதாரா் பெயா் | 7.3.2013 மின் ஏலக் கேள்வி தொகை | 7.3.2013 அன்று நடை பெற்ற ஒப்பந்தப் புள்ளி தொகை | 7.3.2013 உயா்ந்த பட்ச மின்ஏலக் கேள்வி தொகை / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.5 ஓணாப்பாளையம் ரோடு (10 x16) 160 சதுரடி அளவுள்ள கடை எண்-5 | 5130 | S.சங்கா்<br>V.T.செல்வகுமாா் | -<br>5710 | 5850<br>- | 5850 |
| 2. | வார்டு எண்.22 மேட்டுப்பாளையம் சாலை அண்ணா மாா்கெட்டில் 20' x 10' = 200 சதுரடி அளவுகள் கொண்ட கடை | 39994 | S.சூசைராஜ்<br>M.செல்வம் | -<br>45900 | 50150<br>40500 | 50150 |

வரிசை எண். 1-ல் உள்ள வார்டு எண்.5 ஓணாப்பாளையம் ரோடு (10 x16) 160 சதுரடி அளவுள்ள கடை எண்-5-க்கு அரசு மதிப்புத் தொகையாக ரூ.5130/- நிா்ணயம் செய்யப்பட்டது. திரு.S.சங்கா் என்பவா் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5850-க்கு கோரியுள்ளாா். இத்தொகை அரசு மதிப்புத் தொகையை விட கூடுதலாக உள்ளது. வரிசை எண். 2-ல் உள்ள வாா்டு எண்.22 மேட்டுப்பாளையம் சாலை அண்ணா மாா்கெட்டில் 20' x 10' = 200 சதுரடி அளவுகள் கொண்ட கடை அரசு மதிப்புத் தொகையாக ரூ.39994/- நிா்ணயம் செய்யப்பட்டது. திரு. S.சூசைராஜ் என்பவா் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.50150-க்கு கோரியுள்ளாா். இத்தொகை அரசு மதிப்புத் தொகையை விட கூடுதலாக உள்ளது.

எனவே வரிசை எண்.1-ல் கண்ட இனத்திற்கு திரு.S.சங்கா் என்பவா் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதன் பேரில் ஒதுக்கீடு செய்யவும், வரிசை எண்.2-ல் கண்ட இனத்திற்கு திரு.S.சூசைராஜ் என்பவா் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதன் பேரில் ஒதுக்கீடு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் .01 நாள்.22.04.2013-ல் வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு தற்போதுள்ள உயர்ந்தப்பட்ச ஏலத்தொகையை விட கூடுதலாக வருவாய் வர வாய்ப்புள்ளதால் மறுஏலம் கோர மாமன்றத்திற்குப்பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண். 1-ல் உள்ள இனத்திற்கு உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 25.04.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 1 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

| | |
|---|---|
| **பொருள் :** | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 55க்கு உட்பட்ட செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக |
| **பார்வை :** | 1. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 19.03.2013<br>2. செயற்பொறியாளர் / மையம் கோவை மின் பகிர்மான வட்டம் அவர்களது கடிதம் நாள் 21.12.2012<br>3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 6 நாள் 22.04.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் பி.என்.பாளையம், செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரை தளத்தில் 3(மூன்று) கடைகளும் முதல் தளத்தில் 3(மூன்று) கடைகளும் உள்ளன. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.26.88/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைதளம்

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | 10 X 11 | 110 | ரூ.3500/- |
| 2 | 10 X 11 | 110 | ரூ.3500/- |
| 3 | 21 X 11 | 231 | ரூ.6700/- |

முதல் தளம்

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 4 | 10 X 11 | 110 | ரூ.3000/- |
| 5 | 10 X 11 | 110 | ரூ.3000/- |
| 6 | 21 X 11 | 231 | ரூ.6250/- |

மேற்படி கடைகளில் தரை தளத்தில் 1 கடையினை மின்கட்டணம் வசூல் மையம் அமைப்பதற்கும், முதல் தளம் முழுவதும் உதவி செயற்பொறியளர் பி.என்.பாளையம் பிரிவுற்கும் ஒதுக்கீடு செய்யுமாறு பார்வை 2ல் காணும் செயற்பொறியாளர் / மையம் கோவை மின் பகிர்மான வட்டம் அவர்களது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையினை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு கடைகளை ஒதுக்கீடு செய்யவும் மீதமுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் திர்மானத்தில் இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வைப்பு தொகை | காப்பு தொகை | சால்வென்சி தொகை | சால்வென்சிக்கு பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.50000/- | ரூ.50000/- | ரூ.200000/- | ரூ.50000/- |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6508/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்  38  நாள்  25.04.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 6 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

| | |
|---|---|
| பொருள் : | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 55க்கு உட்பட்ட காய்கடை மைதானம், தண்டபாணி வீதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக |
| பார்வை : | 1.. உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 19.03.2013<br>2.. முதுநிலை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் அவர்களது கடிதம் நாள் 05.03.2013<br>3.. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 7 நாள் 22.04.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் பி.என்.பாளையம், காய்கடை மைதானம், தண்டபாணி வீதியில் மாநகராட்சி மூலம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரை தளத்தில் 3(மூன்று) கடைகளும் முதல் தளத்தில் 4(நான்கு) கடைகளும் உள்ளன. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.42.51/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் பார்வை 1ல் காணும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைதளம்

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | 11 X 11 | 121 | ரூ.5750/- |
| 2 | 11 X 11 | 121 | ரூ.5750/- |
| 3 | 27 X 11 | 297 | ரூ.13000/- |

முதல் தளம்

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 4 வடக்கு பார்த்தது | 11 X 11 | 121 | ரூ.5200/- |
| 5 வடக்கு பார்த்தது | 11 X 11 | 121 | ரூ.5200/- |
| 6 மேற்கு பார்த்தது | 10 X 11 | 110 | ரூ.4700/- |
| 7 மேற்கு பார்த்தது | 16 X 13 | 208 | ரூ.9000/- |

மேற்படி கடைகளில் தரை தளத்தில் கடை எண் 3ல் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் அமுதம் அங்காடி எண் 42 னை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்யுமாறு பார்வை 2ல் காணும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் முதுநிலை மண்டல மேலாளர் அவர்களது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையினை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு கடைகளை ஒதுக்கீடு செய்யவும் மீதமுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் திர்மானத்தில் இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வைப்பு தொகை | காப்பு தொகை | சால்வென்சி தொகை | சால்வென்சிக்கு பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.50000/- | ரூ.50000/- | ரூ.200000/- | ரூ.50000/- |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3044/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 25.04.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 7 நாள் 22.04.2013 ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகரத்தில் 5 ‘‘அம்மா உணவகங்கள்’’ திறக்கப்பட வேண்டும் என்ற செயலாக்கம் குறித்து முதற்கட்டமாக மண்டலத்திற்கு ஒன்று வீதம் 5 உணவகங்களை திறக்க பிரேரணை அனுப்பியது – மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி 25.10.2011 முதல் கவுண்டம்பாளையம் நகராட்சி, குறிச்சி நகராட்சி, குனியமுத்தூர் நகராட்சி, வீரகேரளம் பேரூராட்சி, துடியலூர், வடவள்ளி, சரவணம்பட்டி, வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி, மற்றும் விளாங்குறிச்சி ஊராட்சி, ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சியாக 5 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது. விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி ஆனது 257.04 ச.கி.மீ பரப்பளவுடன் 100 வார்டுகளை கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 16,01,438 ஆகும்.

கோவை மாநகரம் தொழில் மற்றும் வியாபார நிறுவனங்கள் நிறைந்த நகரமாகும். தினசரி இம்மாநகருக்கு 2,00,000 பேர் தொழில் மற்றும் வியாபாரம் நிமித்தமாக வந்து செல்கின்றனர். தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களில் பணிபுரிவோர் பெருமளவில் வசித்து வருகின்றனர். மேலும் இம்மாநகராட்சியில் 210 எண்ணிக்கையில் குடிசைப்பகுதிகள் உள்ளது. இக்குடிசைப்பகுதிகளின் உத்தேச மக்கள் தொகை1,14,367ஆகும்.

தொழில் மற்றும் வியாபாரங்களில் ஈடுபடுவோர் மற்றும் குடிசைப்பகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்வாதாரம், உணவு முறை ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக உள்ளது. இவர்களுக்கு சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தரமான உணவுகள் குறைவான விலையில் கிடைக்க வாய்ப்பு இல்லை.

சென்னை மாநகராட்சியில் தினக்கூலிகள் மற்றும் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறிப்பிட்ட இடங்களை தேர்வு செய்து சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து சலுகை விலையில் தரமான உணவு ‘‘**அம்மா உணவகம்**’’ மூலம் வழங்க திட்டமிட்டு முதல்கட்டமாக 200 சிற்றுண்டி உணவகங்கள் திறந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் சென்னையைத் தொடர்ந்து ஏனைய மாநகராட்சிகளிலும் இத்திட்டம் தொடங்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் இத்திட்டம் துவக்க முதற்கட்டமாக பின்வரும் 5 இடங்களில் ‘‘**அம்மா உணவகம்**’’ அமைக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | கிழக்கு மண்டலம் | வார்டு எண் 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலைய உணவகம் |
| 2) | மேற்கு மண்டலம் | வார்டு எண் 24 | மலரங்காடி ஏல அரங்கம் |
| 3) | வடக்கு மண்டலம் | வார்டு எண் 41 | மணியகாரன்பாளையம் ICDS சென்டர் |
| 4) | தெற்கு மண்டலம் | வார்டு எண் 98 | குறிச்சி பழைய நகராட்சி அலுவலகம் |
| 5) | மத்திய மண்டலம் | வார்டு எண் 68 | சுகாதார ஆய்வாளர் பழைய அலுவலகம் (80 அடி ரோடு இராமநாதபுரம்) |

அ) முதற்கட்டமாக மேற்குறிப்பிட்ட 5 இடங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதியும்,

ஆ) மேற்படி 5 எண்ணிக்கை அம்மா உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளுக்கான தயாரிப்பு செலவு ரூ.161.66 லட்சம் விற்பனை மூலம் பெறப்படும் வருவாய் ரூ.65.71 லட்சம் ஆகியவற்றிக்கிடையேயான வித்யாசத்தொகையான பற்றாக்குறை தொகை ரூ.95.95 லட்சம் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

இ) இதற்கான பாத்திரங்கள் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டவும் ஆகும் செலவினங்களை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும்

ஈ) இத்திட்டம் ஏழை மக்களுக்கு பயன்படும் நோக்கத்தில் செயல்படுத்தப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திலிருந்து, இத்திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியை கிலோ ரூ.1.00 என்ற விலையில் பெறுவதற்கான ஆணை வழங்கவும்.

உ) இத்திட்டத்திற்கு தேவைப்படும் இதர உணவு பொருட்களான உளுந்து, துவரம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யும் விலைக்கே பெற்றுக்கொள்ளவும்,

ஊ) இத்திட்டத்திற்கு தேவைப்படும் மிளகாய், புளி, மஞ்சள்தூள், பொட்டுக்கடலை, கடுகு, வெந்தயம் ஆகியவற்றை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் இருந்து கொள்முதல் செய்யும் விலைக்கே பெற்றிடவும்,

எ) காய்கறிகள், தேங்காய், தக்காளி மற்றும் வெங்காயம் ஆகியவற்றை அன்றாடம் வெளி சந்தையில் அன்றைய விலையில் கொள்முதல் செய்வதற்கும்,

ஏ) இத்திட்டத்திற்கு தேவைப்படும் தயிரை ஆவின் நிறுவனத்திலிருந்து கொள்முதல் விலைக்கு பெற்றிடவும்,

ஐ) இத்திட்டத்திற்கு தேவைப்படும் சமையல் எரிவாயுவினை சிந்தாமணி கூட்டுறவு பண்டக சாலை எரிவாயு விற்பனை நிலையத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளவும். அரசின் ஆணைவேண்டி உரிய கருத்துருவினை அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை வழியாக அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-மாமன்றத்தின் அனுமதி கோரி முன்னர் அனுப்பட்ட கருத்துருவிற்கு பின்னேற்பு வழங்கலாம்.

எண்.3265/2013/எம்.இ.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 41**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் முதியோர் ஒய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 147 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவற்றுள்:-

| | |
|---|---|
| தகுதியுடையவர்கள் | 145 |
| நிராகரிக்கப்பட்டவர்கள் | 2 |
| மொத்தம் | 147 |

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில், மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய 145 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 772/13/எம்.இ.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 25.04.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட சாலைகளில் முதல் கட்டமாக 48.654 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.14.53 கோடியிலும், இரண்டாம் கட்டமாக 146.46 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.51.26 கோடி மதிப்பீடில் சாலைகள் புதுப்பிக்கப்பட்டது, மூன்றாம் கட்டமாக பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட 116.215 கி. மீட்டர் நீளம் உள்ள சாலைகளை புதுப்பிப்பதற்கு ரூ 50.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற பகுதிகளில் சாலைகளை புதுப்பிக்க ரூ.50.80 கோடி ஒதுக்கீடு செய்யக் கோரி அனுப்பிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதிநிறுவனத்திற்கு (TNUDF) அனுப்பியதில் கீழ்க்கண்ட நிதிப் பகிர்வில் மேற்படி பணிகளை செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நிதி ஆதாரம் | தொகை ரூ. கோடியில் |
|---|---|
| கடன் (TNUDP -III & TNUDF) | 35.56 |
| மானியம் (TNUDP -III) | 10-16 |
| மாநகராட்சி பங்குத் தொகை | 5.08 |
| மொத்தம் | 50.80 |

எனவே மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற கீழ்கண்ட சாலைகளை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி நிதி பங்கீட்டின்படி நிதி ஒதுக்கீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### <u>கிழக்கு மண்டலம்</u>

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 56 | வார்டு எண் 56-க்குட்பட்ட பாலசுப்பிரமணியா நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதியில் தார்தளம் அமைத்தல் | 0.850 | 44.80 | |
| 2. | 56 | வார்டு எண் 56 – க்குட்பட்ட அண்ணா நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதியில் தார் தளம் அமைத்தல் | 0.440 | 20.50 | |
| 3. | 56 | வார்டு எண் 56- க்குட்பட்ட ஈ.வெ.ரா பெரியார் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதியில் தார் தளம் அமைத்தல் | 0.470 | 21.10 | |
| 4. | 64 | வார்டு எண் 64-க்குட்பட்ட பிருந்தாவன் காலனி பகுதியில் தார் தளம் அமைத்தல் | 0.900 | 30.70 | |
| 5. | 64 | வார்டு எண் 64-க்குட்பட்ட ஸ்ரீநிவாசா நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.975 | 66.30 | |
| 6. | 64 | வார்டு எண் 64-க்குட்பட்ட ஜெய ஸ்ரீ நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 2.000 | 75.00 | |
| 7. | 64 | வார்டு எண் 64–க்குட்பட்ட செல்லாண்டியம்மன் நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.140 | 25.00 | |
| 8. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட ஆண்டாள் லே-அவுட், ஐயர் மருத்துவமனை சாலை மற்றும் எம்.ஜி.ஆர். நகர் விரிவாக்கம் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.573 | 74.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட பி.ஆர் நகர் மற்றும் கோத்தாரி லே- அவுட் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.980 | 73.00 | |
| 10. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட கிருஷ்ணா காலனி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 2.040 | 75.00 | |
| 11. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட ஹிந்துஸ்தான் அவென்யூ பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.910 | 54.00 | |
| 12. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட ராஜா நகர் மற்றும் சிவானி நகர் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.747 | 49.00 | |
| 13. | 66 | வார்டு எண் 66 – க்குட்பட்ட ராஜேஸ்வரி நகர் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.531 | 36.00 | |
| 14. | 66 | வார்டு எண் 66- க்குட்பட்ட ராம் கார்டன் மற்றும் சின்னய்யாவு லே-அவுட் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.889 | 42.00 | |
| 15. | 66 | வார்டு எண் 66-க்குட்பட்ட வசந்தா நகர் மற்றும் கன்னபிரான் மில் ரோடு பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.115 | 52.00 | |
| 16. | 67 | வார்டு எண் 67 –க்குட்பட்ட டி நகர் சாலை பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.967 | 63.00 | |
| 17. | 67 | வார்டு எண் 67-க்குட்பட்ட பாலாஜி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.646 | 29.00 | |
| 18. | 67 | வார்டு எண் 67-க்குட்பட்ட சௌரிபாளையம் சாலை முதல் திருச்சி சாலை சங்கனூர் பள்ளம் வரை உள்ள பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 0.405 | 41.20 | |
| 19. | 75 | வார்டு எண் 75-க்குட்பட்ட பாரதிதாசன் நகர் மற்றும் நேதாஜி நகர் குறுக்கு சாலை வரை உள்ள பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.095 | 74.85 | |
| 20. | 75 | வார்டு எண் 75-க்குட்பட்ட பிஸ்மி நகர் மற்றும் இலாஹி நகர் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.280 | 52.50 | |
| 21. | 75 | வார்டு எண் 75-க்குட்பட்ட ரமலான் நகர், நானியார் நகர் மற்றும் ஃபாதிமா நகர் பகுதியில் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.450 | 60.00 | |
| 22 | 75 | வார்டு எண் 75 – க்குட்பட்ட சலாமுத் நகர், மற்றும் வள்ளல் நகர் பகுதியில் தார்தளம் உறுதிப்படுத்துதல் | 1.480 | 64.00 | |
| 23 | 57 | வார்டு எண் 57 க்குட்பட்ட ஏ.கே.ஜி. நகர் மெயின் ரோடு தார்தளம் உறுதிப்படுத்துதல் | 0.230 | 26.00 | |
| 24 | 57 | வார்டு எண் 57 ஏ.கே.ஜி. நகர் 1,2,3 முருகன் நகர், ஆண்டாள் நகர் தார் தளம் உறுதிப்படுத்துதல் | 1.049 | 75.00 | |
| | | மொத்தம் | 25.162 | 1223.95 | |

மேற்கு மண்டலம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 10 | சின்ன சுப்பண்ணன் வீதி, அருணாசலம் வீதி, கே.எஸ்.ராமசாமி வீதி, எம்.எ.பழனிசாமி வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.476 | 58.80 | |
| 2. | 11 | பாலசுப்பிரமணியன் வீதி பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.001 | 58.50 | |
| 3. | 13 | வசந்தம் நகர் மற்றும் அம்மன் கோவில் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.660 | 50.20 | |
| 4. | 13 | கே.கே.புதூர் பிரதான சாலை (ராமலிங்க நகர் 3வது குறுக்கு சாலை மற்றும் தடாகம் சாலைகளில்) தார்தளம் புதுப்பித்தல் | 0.90 | 30.80 | |
| 5. | 14 | மணியகார சந்து மற்றும் பொங்காலியம்மன் கோவில் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 0.468 | 21.90 | |
| 6. | 15 | ராஜேந்திர பிரசாத் வீதி மற்றும் சம்பத் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 0.84 | 33.00 | |
| 7. | 20 | கோபால் தோட்டம், என்.ஆர்.ஜி. வீதி, நேருநஜி வீதி மற்றும் எஸ்.எம். மருதாசலம் வீதி 1 மற்றும் 2-ல் தார்தளம் புதுப்பித்தல் | 0.728 | 32.50 | |
| 8. | 20 | ராதாகிருஷ்ணன் வீதி மற்றும் லட்சுமி நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.088 | 39.30 | |
| 9. | 21 | பனைமரத்தூர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.998 | 38.00 | |
| 10. | 21 | கோகுலம் காலனி 3 மற்றும் 4 குறுக்கு சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.293 | 50.00 | |
| 11. | 14 | சாஸ்திரி வீதியில் தடாகம் சாலை முதல் மேற்காக தார்தளம் புதுப்பித்தல் | 0.85 | 49.75 | |
| 12. | 14 | தவசி நகர் சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் | 1.35 | 75.00 | |
| 13. | 15 | தாகூர் வீதி பி.என் புதூர் வீதிகள். இந்திராகாந்தி வீதி, என்.ஜி.ஆர். வீதி மற்றும் சாஸ்திரி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.175 | 61.00 | |
| 14. | 15 | ராதிகா அவென்யூ குறுக்கு சாலைகள் ஐஸ்வரியா நகர் மற்றும் பொன்னுசாமி நகர் சாலைகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 1.00 | 51.70 | |
| 15. | 20 | சுகர்கேன் பிரதான சாலையில் மருதமலை சாலை முதல் சுண்டப்பாளையம் சாலை வரை தார்தளம் புதுப்பித்தல் | 0.875 | 49.50 | |
| 16. | 20 | அண்ணா நகர் சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் | 0.65 | 31.55 | |
| 17. | 22 | என். எஸ்.ஆர். சாலையில் தடாகம் சாலை முதல் கிழக்காக தார்தளம் புதுப்பித்தல் | 0.900 | 63.40 | |
| | | மொத்தம் | 17.252 | 794.90 | |

தெற்கு மண்டலம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 76 | மீனாட்சி நகரில் தார்தளம் அமைத்தல் | 0.85 | 42.70 | |
| 2. | 76 | பனைமரத்தூர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 0.76 | 57.00 | |
| 3. | 77 | என்.எஸ்.கே. வீதி, சோழன் நகரில் தார்தளம் அமைத்தல் | 1.14 | 61.90 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | 77 | ராமமூர்த்தி ரோடு இணைப்புச் சாலையில் தார்தளம் அமைத்தல் | 0.68 | 54.30 | |
| 5. | 77 | ஸ்ரீநகர், எஸ்.ஆர்.எஸ் லே அவுட், பழனிசாமி காலனி 2வது வீதியில் தார்தளம் அமைத்தல் | 1.00 | 86.00 | |
| 6. | 77 | அருள் கார்டன் தார்தளம் அமைத்தல் | 0.58 | 29.00 | |
| 7. | 77 | சண்முகராஜா புரம், வேலப்ப கவுண்டர் தோட்டம் தார்தளம் அமைத்தல | 0.65 | 32.70 | |
| 8. | 77 | ஆரங்கநாயகம் லே அவுட் மற்றும் வள்ளியம்மை நகரில் தார் தளம் அமைத்தல் | 0.77 | 41.30 | |
| 9. | 77 | ராஜன் தோட்டம், கோனார் தோட்டம், ரங்கசாமி காலனி தார்தளம் அமைத்தல் | 1.08 | 56.70 | |
| 10. | 78 | ராஜரத்தினம் கார்டன் மற்றும் சந்திராசேகரா புரம் தார்தளம் அமைத்தல் | 0.95 | 42.50 | |
| 11. | 78 | வடக்கு வீட்டு வசதி குடியிருப்பில் தார்தளம் அமைத்தல் | 0.57 | 22.50 | |
| 12. | 79 | பிருந்தா லே அவுட்டில் தார்தளம் அமைத்தல் | 1.18 | 58.60 | |
| 13. | 79 | பொன்னுசாமி லே அவுட், கோவிந்தசாமி லே அவுட் மற்றும் கிருஷ்ணசாமி லே அவுட் தார்தளம் அமைத்தல் | 0.98 | 60.70 | |
| 14. | 79 | கௌரி ஆண்டவர் லே அவுட்டில் தார்தளம் அமைத்தல் | 0.43 | 21.70 | |
| 15. | 79 | கோபால் லே அவுட் மற்றும் நஞ்சுண்டாபுரம் லே அவுட் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 1.03 | 55.80 | |
| 16. | 86 | அன்பு நகரில் தார்தளம் அமைத்தல் | 0.97 | 49.00 | |
| 17. | 86 | அருள் கார்டனில் தார்தளம் அமைத்தல் | 1.00 | 50.30 | |
| 18. | 86 | பிலால் நகர் மற்றும் பிலால் எஸ்டேட் தார்தளம் அமைத்தல் | 1.47 | 73.20 | |
| 19. | 86 | பொன்விழா நகரில் தார்தளம் அமைத்தல் | 1.39 | 69.30 | |
| 20 | 86 | சௌவ்கார் நகரில் தார்தளம் அமைத்தல் | 1.28 | 63.70 | |
| 21 | 86 | அல்அமீன் காலனியில் தார்தளம் அமைத்தல் | 0.52 | 31.40 | |
| | | மொத்தம் | 19.28 | 1060.3 | |

<u>வடக்கு மண்டலம்</u>

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 39 | வார்டு எண்.39க்குட்பட்ட பாரதி காலனி குறுக்கு சாலை, துரைசாமி நகர் பிரதான சாலை, வென்கிலான் குட்டை மற்றும் பி.ஆர்.பி.கார்டன் குறுக்கு சாலை பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.900 | 67.50 | |
| 2. | 40 | வார்டு எண் 40க்குட்பட்ட வி.ஜி.ராவ் நகர் பகுதியில் தார்களம் புதுப்பித்தல் | 2.990 | 74.70 | |
| 3. | 40 | வார்டு எண்.40க்குட்டபட்ட சுபாஷ் நகர் மற்றும் இளங்கோ நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.490 | 27.60 | |
| 4 | 40 | வார்டு எண் 40க்குட்பட்ட தென்றல் நகர் மற்றும் பி.பி.சி. காலனி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 2.480 | 74.80 | |
| 5 | 40 | வார்டு எண் 40க்குட்பட்ட வரதராஜுலு நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 3.120 | 74.50 | |
| 6. | 41 | வார்டு எண்.41க்குட்பட்ட பாரதிநகர் மற்றும் ராஜா நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.310 | 35.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட ஓம் சக்தி நகர் விரிவாக்கம் மற்றும் திருவள்ளுவர் வீதி பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.897 | 68.50 | |
| 8. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட கே.கே. நகர் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 2.360 | 49.00 | |
| 9. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட ராஜீவ் காந்தி நகர், நேரு நகர், கஸ்தூரிபாய் நகர் மற்றும் பெரியார் நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 2.450 | 54.00 | |
| 10. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட ஆர்.கே.புரம் மற்றும் மருதமலைக்கவுண்டர் லே அவுட் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 1.610 | 71.00 | |
| 11. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட விவேகானந்தா நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 0.765 | 23.00 | |
| 12 | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட புத்தர் வீதி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.597 | 15.00 | |
| 13 | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட புத்தர் வீதி பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 0.313 | 15.00 | |
| 14. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட காவலர் குடியிருப்பு பகுதி –II மற்றும் வ.உ.சி நகர் விடுபட்ட பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.410 | 54.50 | |
| 15 | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட தயிர் இட்டேரி சாலை நல்லாம்பாளையம் சாலை முதல் சங்கனூர் சாலை வரை தார்தளம் புதுப்பித்தல் | 1.160 | 74.50 | |
| 16 | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட அன்னையப்பன் வீதி சோப் கம்பெனி முதல் சங்கனூர் சாலை வரை தார்தளம் புதுப்பித்தல் | 0.780 | 58.00 | |
| 17 | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட நல்லாம்பாளையம் சாலை பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.600 | 66.00 | |
| 18 | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட அன்னையப்பன் வீதி விரிவாக்கம், கணபதிபாளையம் வீதி, இடும்பன் வீதி, கணேஷ் நகர் மற்றும் சரஸ்வதி நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 1.115 | 26.00 | |
| 19 | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட பாரதி நகர், காந்திஜி சாலை, நேதாஜி வீதி, ஓம் நகர் III குமாரசாமி கவுண்டர் வீதி மற்றும் கண்ணுசாமி லே அவுட் மற்றும் வேணுகோபால் லே அவுட் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 1.325 | 30.00 | |
| 20 | 47 | வார்டு எண் 47க்குட்பட்ட பாலன் நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.705 | 31.00 | |
| 21 | 47 | வார்டு எண் 47க்குட்பட்ட கணபதிபுதூர் வீதி எண் 3,4,8,9 மற்றும் 10 குறுக்கு சாலை பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.290 | 44.00 | |
| 22 | 47 | வார்டு எண் 47க்குட்பட்ட கணபதிபுதூர் வீதி எண் 1,2,3,4 மற்றும் குறுக்கு சாலை பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.100 | 27.00 | |
| 23 | 55 | வார்டு எண் 55க்குட்பட்ட திட்ட சாலை(Airtel road) அவிநாசி சாலையிலிருந்து சிற்றம்பலம் லே அவுட் மற்றும் பாப்பம்மாள் லே அவுட், கந்தசாமி லே அவுட் மற்றும் வேணுகோபால் லே அவுட் சாலை பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.020 | 74.65 | |
| 24 | 55 | வார்டு எண் 55க்குட்பட்ட பொன்னி நகர் பிரதான சாலை மற்றும் நவ இந்தியா திட்ட சாலை மயானம் சாலை முதல் ஸ்ரீராம் அவென்யூ சந்திப்பு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.890 | 75.00 | |
| 25 | 55 | வார்டு எண்.55க்குட்பட்ட பரமேஸ்வரன்பிள்ளை லே அவுட் பிராதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.731 | 57.00 | |
| 26 | 55 | வார்டு எண் 55க்குட்பட்ட ஜி.கே.டி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.875 | 42.00 | |
| | | மொத்தம் | 36.283 | 1309.25 | |

மத்திய மண்டலம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 45 | லெனின் நகர், ஆர்.ஜி. நகர் மற்றும் தங்கம் நகரில் தார்தளம் புதுப்பித்தல் | 1.790 | 54.00 | |
| 2. | | சாமி கவுண்டர் வீதி, காமாட்சி நகர் மற்றும் கந்தசாமி கவுண்டர் வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.790 | 48.70 | |
| 3. | | தில்லை நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 3.025 | 71.00 | |
| 4. | | எஸ்.பி. கன்னுசாமி வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.265 | 30.50 | |
| 5 | 49 | அண்ணா நகர், நந்தி நகர், வேலம்மாள் நகர் மற்றும் ராமதாஸ் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 2.340 | 74.50 | |
| 6 | | நெடுஞ்செழியன் வீதி, சின்னத்தம்பி விதி மற்றும் ஐசக் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 2.200 | 43.90 | |
| 7 | | சம்பத் வீதி, பக்தவச்சலம் வீதி மற்றும் பட்டேல் வீதி தார்தளம் புதுப்பித்தல் | 1.860 | 62.00 | |
| 8 | | சாஸ்திரி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.100 | 60.00 | |
| 9 | 53 | சின்னசாமி வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.730 | 75.00 | |
| 10 | | எ2-எ2 திட்ட சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 0.337 | 50.00 | |
| 11 | | நேதாஜி சாலை, மற்றும் இந்திரா நகர் தார்தளம் புதுப்பித்தல் | 0.601 | 26.00 | |
| 12 | 68 | 80 அடி சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 0.430 | 45.00 | |
| 13 | 68 & 74 | பாரதி நகர் பிரதான சாலையிருந்து இராமநாதபுரம் பிரதான சாலை வரையிலும் பாப்பம்மாள் லே அவுட் சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 0.770 | 51.30 | |
| | | மொத்தம் | 18.238 | 691.90 | |

மேலும், மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகிர்வின் அடிப்படையில் திட்டத்திற்கான மானியம் மற்றும் கடன் தொகையை தமிழ்நாடு நகர்புர வளர்சிசி நிதி நிறுவணத்திடம் இருந்து பெற்று மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மேற்கண்ட நிதிப்பகிர்வின் அடிப்படையில் திட்டத்திற்கான மானியம் மற்றும் கடன் தொகையினை தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

2. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி திட்டத்திற்கான மாநகராட்சி பங்கு தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்10897/ 2012/ எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 25.04.2013**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3-க்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 43

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் பிளம்பர்கள் உரிமம் வழங்குவது – கடன் தீர்வை சான்றிதழ் மதிப்பு குறைப்பது - சம்பந்தமாக. |
| பார்வை | கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 278 நாள் 29.11.2012 |

*******

குழாய் பொருத்துனர் (பிளம்பர்) உரிமம் வழங்க பார்வையில் காண் தீர்மானத்தின்படி கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் கோரும் விண்ணப்பங்களுக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.287 நாள்.5.11.96ல் குடிநீர் இணைப்பு வேண்டுவோர் குடிநீர் இணைப்பு பெற ஆறு நடைமுறைகளை தெரிவித்து இந்த நடைமுறைகளை பரிட்சார்த்த முறையில் ஒருவருட காலத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அமல்படுத்தலாம் என அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த அரசாணைக்கு எதிராக தமிழ்நாடு பிளம்பர்கள் அசோசியேசன் உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.18855/96–ல் வழக்கு தொடர்ந்தனர். இதனால் அரசு வழக்கறிஞரிடம் கருத்து பெறப்பட்டு ஒவ்வொரு வருடமும் நிபந்தனைகளின் அடிப்படையில் 2005–06 மற்றும் 2006–07ம் ஆண்டு வரையில் பிளம்பர் உரிமம் (குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் செய்ய 56 நபர்களுக்கும் மற்றும் குடிநீர் இணைப்பு பணிகள் மட்டும் செய்ய 17 நபர்களுக்கும்) வழங்கப்பட்டன.

உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் இந்த அரசாணை வெளியிடப்பட்டு ஓராண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகத்தக்கதாலும் இந்த அரசாணை பரிட்சார்த்த அடிப்படையில் வெளியிடப்பட்டதாலும் மேலும் பலகாரணங்களினாலும் இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடிவு பெற்றது.

இத்தீர்ப்பு நகல் கோவை மாநகராட்சிக்கு 28.06.07ல் கிடைக்கப்பெற்ற பின்னர் 2006–07ம் ஆண்டிற்கு பிளம்பர் உரிமம் வழங்க பரிசீலிக்கப்பட்டு அரசாணை எண்.523 நாள்.19.9.95ஐ அமல்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞரிடம் கருத்து கேட்கப்பட்டு பின்னர் புதிதாக பிளம்பர் உரிமம் வழங்குவது பற்றி முடிவு எடுக்க, புதிதாக பிளம்பர் உரிமம் வழங்க அரசால் அரசாணை ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா எனவும் பிளம்பர் உரிமம் வழங்குவதற்கு தெளிவுரை வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு தொடர்ச்சியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் சங்கத்தின் 28.11.2011ம் தேதியிட்ட கடிதத்தில் தங்களுக்கு உரிமத்தினை வழங்குமாறும் இது சம்மந்தமாக உயர்நீதிமன்றம் 20.06.2011ல் வழங்கியுள்ள தீர்ப்பின் நகலுடன் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த தீர்ப்பின்படி அரசாணை எண்.287/96ல் வெளியிடப்பட்டு ஒரு வருட காலத்திற்கு பரிட்சார்த்த முறையில் மட்டுமே இருந்ததால் இவ்வழக்கினை முடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர். தற்போது இம்மாநகராட்சி 72 வார்டிலிருந்து 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியின் பரப்பளவு 257.04 ச.கி.மீ ஆக உயர்ந்துள்ளது. தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது.

மேலும் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் தற்போது புதிதாக இணைக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதியில் (நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில்),

1. குடிநீர் இணைப்பு சட்டத்திற்கு புறம்பாக அதாவது முறையான அனுமதி பெறாமல் உள்ளது கண்டறியப்பட்டது.
2. மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் அளவுமானி பொருத்தப்படவில்லை.
3. குடிநீர் இணைப்பு அனுமதி பெறாத கட்டிங்களுக்கும் மற்றும் காலி மனையிடங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
4. குடிநீர் இணைப்பு பகிர்மான குழாயிலிருந்து தாழ்வாக பதிக்கப்பட்டுள்ளதால் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.
5. குடிநீர் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கப்பட்டும் இணைப்பு வழங்காமல் நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே, இம்மாநகராட்சியின் பழைய 72 வார்டு பகுதிகளில் இதுவரை வழங்கப்பட்ட அனைத்து குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு குழாய் இணைப்புகள் பிளம்பர்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அனைத்து இணைப்புகளுக்கும் முறையான உத்தரவு மற்றும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் மற்றும் பழுது நீக்கும் பணிகளுக்கு மாநகராட்சியால் உரிமம் பெறப்பட்ட பிளம்பர்களுக்கு உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என தெரிவித்து திரு.சி.எம்.முருகேசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.23103/12 எண்ணில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுகுறித்து உயர்நீதிமன்ற வழக்கறிஞர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

1. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 197ன் கீழ் மாநகராட்சியிடம் உரிமம் பெற்ற நபர்களை தவிர மற்றவர் யாரும் குடிநீர் செல்லும் குழாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள இடங்களில் பிரவேசிக்க கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குடிநீர் இணைப்பு மற்றும் விநியோகப் பணிகளை செய்வதற்கான பிளம்பர்களுக்கு உரிய அனுமதி வழங்கவேண்டியுள்ளது.
2. மேலும் மாநகராட்சி உபவிதிகளிலும் சில மாறுதல்களும் கூடுதல் சேர்க்கைகளையும் மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

<u>மாநகராட்சி வரைவு உபவிதிகளில் கீழ்கண்டவாறு மாறுதல்கள்:—</u>

1. பக்கம் 1ல் 1.''ஆ''வில், குடிநீர் இணைப்பு பெறுவதற்காக 1981 ஆம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு, 200 (1)இன் படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தினை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன், அதற்கான படிவ கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.125 (ரூபாய் நூற்று இருபத்திஐந்து மட்டும்) செலுத்தி படிவம் 'அ' பெற்று ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கீடு முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீடு கட்டணங்களை மாநகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும். என உள்ளதில்,
   குடிநீர் குழாய் இணைப்பு ''மாநகராட்சியின் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக''வழங்கப்படும். எனவும்

2. 1.''இ''ல் மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மேற்படி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமாக ரூ10— பணியீட்டுத் தொகையாக மனுதாரர் செலுத்த வேண்டும். இத்துடன் சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு நிர்ணயம் செய்யும் அபராத கட்டணமும் செலுத்த வேண்டும். என உள்ளதில்,
   மனுதாரர் குடிநீர் பெறுவதற்காக என உள்ளதை ''மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு தருவதற்காக'' எனவும்

3. 1.''ஈ''ல் அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை முன்பணமாக மாநகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்று பிறகு உரிய தொகையினை மாநகராட்சிக்கு செலுத்திய பின்னரே குடிநீர் இணைப்பு வழங்கப்படும். என உள்ளதில்,
   ''இதர கட்டணங்கள் இதனை ''இதர கட்டணங்களை'' எனவும், மேலும் ''ஆனால்'' இணைப்பு உத்தரவு பெற்றபிறகு ''மதிப்பீட்டு'' தொகையினை எனவும்

4. 1.''ஊ''வில் குடிநீர் குழாய் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் முன்னரே விண்ணப்பதாரர் நிலுவையிலுள்ள சொத்து வரிகள் அனைத்து மாநகராட்சியில் செலுத்தியிருக்க வேண்டும். என உள்ளதில்
   விண்ணப்பதாரர் ''அந்தக் கட்டிடத்திற்கு'' நிலுவையில் உள்ள எனவும்

5. 2.ல் வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் பொருத்தப்படாமல் (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் (Tap rate) அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் அளவுமானி குடிநீர் இணைப்பாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படாமல் இருப்பின் மறு அறிவிப்பின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். என உள்ளதில்
   (Tap rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் ''இந்த உபவிதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து'' 60 நாட்களுக்குள் எனவும்.

6. ‘‘3.அ’’வில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானது (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத (Non Domestic) பயன்பாட்டிற்கு என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, 200 வது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தருணத்திலும் பயன்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படும். என உள்ளதில் வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகங்களுக்கானதா (Domestic) அல்லது வீட்டு உபயோகமல்லாத (Non Domestic) பயன்பாட்டிற்கானதா என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981, பிரிவு 200ன் கீழ் எனவும் மாற்றம் செய்யலாம் .

5 என எண்ணிட்டு :–

மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் :–

(அ) மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வகையான குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள்மூலமாகவே செய்யப்பட வேண்டும்.

(ஆ) தகுதிகள் :–

மாநகராட்சியிடம் உரிமம் கோரி விண்ணப்பிக்கும் பிளம்பர்கள் கீழ்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

1. பத்தாம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். (தேறிய/தவறிய)

2. ITI குழாய் வேலை செய்யும் பிரிவில் Plumber Trade (National Council for Vocational Training) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. குழாய் பொருத்தும் பணிகளில் குறைந்தபட்சம் முன்றாண்டுகள் முன் அனுபவம் உள்ளதற்கான சான்றிதழ்கள் ஒப்படைக்க வேண்டும்.

4. முந்தைய பணி காலத்தில் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து தரமான வேலைகளை செய்வதற்கான நன்னடத்தை சான்றிதழ் பெற்று ஒப்படைக்க வேண்டும்.

5. மேலும் வயது 21 முதல் 45 வரையில் புதிய பிளம்பர் உரிமம் வழங்கப்படும், 60 வயது வரையில் உரிமம் நீட்டிப்பு செய்யப்படும்.

மேலும் அரசாணை எண்.523 நாள் : 19.09.1995–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி

6. ரூ. 5,00,000 ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும்.

7. காப்பீட்டு தொகையாக ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டும்.

8. தகுதியுடையவர்களுக்கு வருடாந்திர உரிமம் புதுப்பித்தல் கட்டணமாக ரூ. 500. செலுத்த வேண்டும்.

9. மாநகராட்சி விதிகளுக்கு புறம்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டால் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்படும்.

எனவே, மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவது குறித்து மாநகராட்சி வரைவு விதி (By Law) மற்றும் துணை விதிகளில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் குறித்து இல்லாத காரணத்தால் இனி வரும் காலங்களில் மாநகராட்சியில் உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலமாக வழங்கலாம் என்பதை மாநகராட்சி குடிநீர் விநியோக வரைவு துணை விதிகளில் மேற்காண் திருத்தங்கள் செய்யவும் மற்றும் துணை விதிகள் அமலுக்கு வரும் காலம் வரை உள்ள காலத்திற்கு தற்காலிகமாக பிளம்பர் உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தகுதிகளில் வரிசை எண் 6ல் ரூ.5,00,000/- ற்கான கடன் தீர்வை சான்றிதழ் (Solvency Certificate) ஒப்படைக்க வேண்டும் என மாமன்றம் நிர்ணையம் செய்துள்ள தொகை மிக அதிகமாக உள்ளது என ஆட்சேபித்தும் கட்டணத்தை குறைத்து நிர்ணயம் செய்து தருமாறு மாநகராட்சி அதிகாரிகளிடம் நேரில் பிளம்பர் உரிமம் வேண்டுவோர் கோரி வருகின்றனர்.

எனவே, கடன் தீர்வை சான்றிதழ் ரூ. 5,00,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆக குறைத்து நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 3851/07/எம்.டி.2.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 25.04.2013**

பொருள் ஒத்திவைக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி